Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 147 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 20, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.60

## தேர்தலை பிற்போடும் தேவை அரசுக்கில்லை!



அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

02 பக்கம்

## உஷ்



தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற தகவல்களுக்கு அப்பால் தேர்தல் நடக்காவிடின் கட்டுப்பணத்தை ஏன் வீணே கட்டுவான் என்று அரசியல் கட்சிகள் சில தங்களுக்குள் ஆலோசித்து வருகின்றனவாம்.

இதனால் கடைசி நாள்வரை காத்திருந்து, கட்டுப்பணத்தை செலுத்த அந்தக் கட்சிகள் உத்தேசித்துள்ளனவாம்.

இதேவேளை தேர்தலை ஒத்திவைப்பதில் ஆளுங்கட்சிக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்குமிடையில் கருத்து முரண்பாடு தொடர்கிறதாம்.

# ஈஸ்ரர் தின தாக்குதல் சம்பவம்:

# ரூ.10 கோடி இழப்பீடு வழங்க சிறிசேனவுக்கு உத்தரவு

## பூஜித, ஹேமசிறி உட்பட்ட மேலும் நால்வருக்கெதிராக உயர்நீதிமன்றம் அதிரடி











•நமது நீதிமன்ற செய்தியாளர்

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உள்ளிட்ட ஐவர், அடிப்படை மனித உரிமையை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல்களில், 269 பேர் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட உள்ளதாக, போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாதமையால், அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சுமத்தி, 12 மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கத்தோலிக்க அருட் தந்தையர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட தரப்பினரால் தாக்கல்செய்யப்பட்ட 12 மனுக்கள் மீதான தீர்ப்பை நேற்று உயர்நீதிமன்றம் அறிவித்தது.

02 பக்கம்

# கோட்டா வெளியேறி ரணில் வந்தாலும்

## மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் இல்லை!

### மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை

HUMAN RIGHTS WATCH

மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று தனது 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வெளியிட்டு, 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஜனாதிபதிகள் மாற்றப்பட்ட போதிலும், நாட்டின் மனித உரிமைகள் நிலைப்பாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை யென தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# நுவரெலியாவில் 12 சபைகளுக்கு பொதுஜன பெரமுன கட்டுப்பணம்



•எஸ்.கணேசன்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 சபைகளுக்கும் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நேற்று கட்டுப்பணம் செலுத்தியது.

02 பக்கம்

## கடன் மறுசீரமைப்பு குறித்து சீன எக்சிம் வங்கியுடன் பேச்சு



இலங்கை மற்றும் சீனாவிற்கிடையிலான இரு தரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இரு தரப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் (சீன எக்சிம் வங்கி) தலைவர் வு புளின் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற காணொளி ஊடான கலந்துரையாடலின்போதே இவ்விடயம்...

02 பக்கம்

## மாணவர்களை பாடசாலைக்கு இணைக்கும் முறைமை

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை




பாடசாலைகளுக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படும் முறை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழுவிற்கு 300 முறைப்பாடுகள் வரை கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைப்பதிலும் 06ஆம் தரத்திற்கு...

02 பக்கம்

## கடன்களை தள்ளுபடி செய்யும் இணக்கப்பாட்டை வழங்குக!

### மத்திய வங்கி ஆளுநர் சீனா, இந்தியாவிடம் கோரிக்கை



கடன்களை தள்ளுபடி செய்வதற்கான இணக்கப்பாட்டை வழங்குமாறு சீனா மற்றும் இந்தியாவிடம் மத்திய வங்கி ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

மைத்ரி எப்படியாவது உந்த தொகையை கட்ட வேணும் பாருங்கோ.. இல்லாட்டி ஜனாதிபதியா இருந்த ஒருத்தர், அதுவும் இத்தனை வருஷம் அரசியலில் இருந்த ஒருத்தருக்கு இதுகூட முடியேல்லையோ எண்டு சிரிப்பாங்கள்...!



## போனஸ் வழங்கக்கோரி ஊழியர்கள் போராட்டம்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில்



02 பக்கம்

## நிலக்கரி இறக்குமதிக்கு நிதி நெருக்கடி

•நா.தினுஷா



நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான நிதி செலுத்துவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஜனவரி முதலாம் திகதிமுதல் மின்சார சபைக்கான நிதி வழங்கும் செயற்பாடுகளை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது. எனவே, மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள இந்த நிதி நெருக்கடி தொடருமாக இருந்தால், மிகக் குறுகிய...

02 பக்கம்

## ஐஸ் கொள்வனவுக்கு சென்ற இருவரை உளவாளிகளென சந்தேகத்தில் கொலை

•எப்.அஸ்லம்

ஐஸ் போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக நம்புக்கனை, ஹுரிமலுவ பிரதேசத்திலுள்ள போதைப்பொருள் வியாபாரியொருவரின் வீட்டுக்குச் சென்ற மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர், போதைப்பொருள் வியாபாரி உள்ளிட்ட சிலரினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் கொலை செய்யப்பட்டு அங்கிருந்த தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களின் புதைகுழி நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்




# 130 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நேற்று முன்தினம் (11) வரை 15 மாவட்டங்களின் 130 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மொனராகலை, களுத்துறை, கண்டி, கொழும்பு, புத்தளம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, கேகாலை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, கம்பஹா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்குரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, இதுவரையில் இலங்கை தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய அமைதிக்கான கூட்டமைப்பு உள்ளிட்ட ஐந்து அரசியல் கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

## கோட்டா வெளியேறி ...

2022ஆம் ஆண்டில் பல ஆண்டுகளாக தவறான ஆட்சி, கடுமையான பொருளாதார நெருக்கடி, சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஊழல் போன்றவற்றால் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் வீதிக்கு வந்தனர்.

நீண்டகாலமாக பாரிய உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை மாதம் பதவி விலகினார். எவ்வாறாயினும், புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைதியான போராட்டங்களை பெருமளவில் நசுக்கியுள்ளார், செயற்பாட்டாளர்களை சிறையில் அடைத்துள்ளார் மற்றும் கடந்த கால மீறல்களுக்கான நீதிக்கான கோரிக்கைகளை புறக்கணித்துள்ளார்.

"சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறல் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடக்குமுறையுடன் பதிலளித்தார்" என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார் .

## கடன் மறுசீரமைப்பு...

தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனத் தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 10ஆம் திகதி சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் தலைவரான வு புளினுடன், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயனுள்ள காணொளி மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதன்போது சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் இலங்கையின் தற்போதைய கடன் மறுசீரமைப்பு பிரச்சினைகள குறித்தும் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இலங்கையின் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பரிமாற்றங்கள் மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டதோடு, பொருளாதார மீட்சியானது நிலையான வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிக்கும் என்று இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

## நுவரெலியாவில் 12 சபைகளுக்கு ...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க, சி.பி.ரத்னாயக்க உள்ளிட்ட மொட்டு கட்சி முக்கியஸ்தர்கள், மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று கட்டுப்பணம் செலுத்தினர். நுவரெலியா மாநகர சபை, தலவாக்கலை - லிந்துலை நகர சபை, ஹட்டன் - டிக்கோயா நகர சபை மற்றும் 9 பிரதேச சபைகளுக்கே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க,

" உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிச்சயம் நடைபெறுமென எதிர்பார்க்கின்றேன். இத் தேர்தலில் அமோக வெற்றிபெறுவோம்" - என்றார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட சி.பி. ரத்னாயக்க,

"ஜனநாயக வழியில் தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றோம். கூட்டணி அமைப்பதற்கான பேச்சுகள் இடம்பெறுகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மொட்டு கட்சிகளுக்கிடையில் பேச்சுகள் தொடர்கின்றன" - என்றார்.

## கடன்களை தள்ளுபடி...

சர்வதேச ஊடகமொன்றுக்கான நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டிருந்தபோதே மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதியை பெற்றுக்கொள்ள இந்தியா மற்றும் சீனாவின் இணக்கப்பாடு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனூடாக அனைத்து தரப்பினருக்கும் நன்மை கிட்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## தேர்தலை பிற்போடும்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசுக்கோ, மொட்டு கட்சிக்கோ இல்லை - என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்டத்துக்கான வேட்புமனு கையொப்பமிடும் நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. தேர்தலை நடத்துவதற்கான நிதி கையிருப்பில் இருப்பதாலேயே தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போடுவதற்காக அரசும் மொட்டு கட்சியும் சதித்திட்டம் தீட்டுவதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட் டுகள் அடிப்படையற்றவை. தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசுக்கோ மொட்டு கட்சிக்கோ எவ்வித பயமுமில்லை.

ஏனைய அரசியல் கட்சிகளை விட தேர்தலில் எதிர்கொள்வதற்கான பலம் எம்மிடம் உள்ளது. அதனால் அரசுக்கோ பொதுஜன பெரமுனவுக்கு இத்தேர்தல் சவால் மிக்கதாக இருக்காது - என்றார்.

# விவசாய உற்பத்தி உதவியாளர்கள் எவ்வித செய்கையும் இடம்பெறாத புறக்கோட்டைக்கு நியமிக்கப்பட்டது ஏன்?

## அமைச்சர் மஹிந்த அமரவீர கேள்வி

கொழும்பு புறக்கோட்டைக்கு பொறுப்பாக கடமையாற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களை உடனடியாக விவசாய பிரதேசங்களில் பணிபுரிய நியமிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

2023ஆம் ஆண்டிற்கான இலங்கையின் கால்நடை துறையின் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

எவ்வித செய்கையும் இடம்பெறாத கொழும்பு புறக்கோட்டையில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டது ஏன் என அமைச்சர் மஹிந்த அமரவீர, அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச துறைகளில் பணியாற்றும் சில அதிகாரிகளின் திறமையின்மை, சில அதிகாரிகள் பொதுமக்களுக்கு முறையாக சேவைகளை வழங்கத் தேவையான பதவிகளில் இல்லாமை காரணமாக நாடும் நாட்டு மக்களும் அரசாங்கமும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதுபோன்ற தேவையற்ற பணியிடங்களுக்கு அதிகாரிகளை நியமிக்காமல், விவசாயம் மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு அவர்களை நியமிக்குமாறு விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

# யானைக்குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்த மூவருக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை

யானைக்குட்டி ஒன்றை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றத்திற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளர் உபாலி பத்மசிறி உள்ளிட்ட மூவருக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் தமித் தொட்டவத்த இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

சக்குரா என்ற யானைக்குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்தமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் யானைகள் பதிவுப் பிரிவின் முன்னாள் எழுதுவினைஞர் பிரியங்கா சஞ்சீவனி மற்றும் யானைக்குட்டியின் உரிமையாளர் சந்திரரத்ன பண்டார ஆகியோர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஏனையோராவர்.

வனஜீவராசிகள் அமைச்சராக இருந்த வசந்த சேனாநாயக்க செய்த முறைப்பாட்டுக்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலித்த சட்டமா அதிபர் இந்த வழக்கை தொடர்ந் திருந்தார்.

வழக்கின் நான்காவது பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த நீதவான் திலின கமகேவை பின்னர் விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

## போனஸ் வழங்கக்கோரி...

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ் வழங்கப்படாமை தொடர்பில் அதன் ஊழியர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்கள் வருடாந்த போனஸ் கோரி பொது முகாமையாளரின் அலுவலகத்தை முற்றுகையிட்டதாக கூறப்படுகிறது.

பணியகத்திற்கான வருடாந்த போனஸ் திறைசேரியால் அங்கீகரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் போனஸ் வழங்காத நிலையில், பல நஷ்டமடைந்த அரச நிறுவனங்கள் போனஸ் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மாணவர்களை பாடசாலைக்கு ...

மேற்பட்ட வகுப்புகளுக்கான மாணவர்களை அனுமதிப்பதிலும் இடம்பெற்ற பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சுற்றறிக்கைகள் அமுல்படுத்தப்பட்ட போதிலும் ஆறாம் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்காக மாணவர்களை அனுமதிப்பது குறித்து கல்வி அமைச்சு ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திலான திட்ட வரைபுகளை இதுவரை தயாரிக்கவில்லை என்பது தற்போதைய விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சில முக்கிய பாடசாலைகளில் உதவித்தொகை பெற்றும் பணம் பெற்றுக்கொண்டும் ஆறாம் வகுப்புக்கு மேலுள்ள வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதால் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற திறமையான மாணவர்களுக்கான வாய்ப்புகள் அற்றுப்போனதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பல தடவைகள் அழைக்கப்பட்டபோதிலும் அவர் இதுவரையில் ஆணைக்குழுவில் ஆஜராகவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் தொடர்ந்தும் ஆணைக்குழுவை புறக்கணிக்கும் பட்சத்தில் அது தொடர்பில் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஐஸ் கொள்வனவுக்கு...

போதைப்பொருள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கலின்போது, இருவரும் பொலிஸாரின் உளவாளிகள் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாவனெல்லை, கெரமினியவத்த பிரதேசத்தைச் சேர்ந்த மொஹமட் இக்பால் மொஹமட் அசார் மற்றும் மாவனெல்லை, கிரிங்கதெனியச் சேர்ந்த மொஹமட் அன்வர் மொஹமட் அர்ஷாட் என்றழைக்கப்படும் 28 வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறு கொலைச் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த இளைஞர்கள் இருவரும் காணாமல் போயிருந்த நிலையில், அது தொடர்பில் மாவனெல்லை பொலிஸாரிடம் கடந்த நவம்பர் மாதம் 18 மற்றும் 25ஆம் திகதிகளில் இரு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவர்கள் காணாமல்போன விவகாரத்தில் ஏற்பட்ட சந்தேகத்தினால், கேகாலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கேகாலை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு ஒப்படைத்துள்ளார்.

கேகாலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகரவின் ஆலோசனைக்கமைய, குறித்த பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அப்சரா அபேகுணவர்தன உள்ளிட்ட அதிகாரிகளினால் இந்த விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த விசாரணைகளின்போது முதல் கட்டமாக மொஹமட் அசார் என்பவர் காணாமல் போனமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர் மாவனெல்லையிலிருந்து ரம்புக்கணை, ஹுரிமலுவேவில் அமைந்துள்ள ஐஸ் போதைப்பொருள் வியாபாரியொருவரின் வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் இன்னுமொரு நண்பருடன் சென்றிருந்ததாக தகவல் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, "நண்பரை இடையில் இருத்திவிட்டு குறித்த வீட்டுக்குச் சென்ற அவரை, அந்த வீட்டுக்குச் சொந்தமான உரிமையாளரான போதைப்பொருள் வியாபாரி உள்ளிட்ட தரப்பினர் தாக்கி கொலை செய்துள்ளதாகவும், இன்னுமொரு இளைஞரை கொலை செய்ததை தான் நேரடியாக பார்த்ததாகவும், இருவரையும் கொலைசெய்து புதைத்த இடத்தை அடையாளம் கண்டுள்ளதாகவும் தகவல் வழங்குனர் ஒருவர் பொலிஸாருக்கு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்களை புதைத்த இடம் தொடர்பான விபரத்தையும் குறித்த நபர் பொலிஸாருக்கு அறிவித்திருக்கிறார்.

அதனையடுத்து, கேகாலை நீதவான் முன்னிலையில் இதுதொடர்பில் விளக்கமளித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கேகாலை நீதவான் வாசனா நவரத்ன முன்னிலையில் நேற்று குறித்த இடத்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், அவர்களை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.01.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4997
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,126,630.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 1 5 6 8 0 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3239
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,086,830.80
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 11 16 43 57

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1452
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,251,933.60
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 7 3 6 8 8 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1027
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 141,571,098.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 23 28 49 74

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 306
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,611,929.80
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 08 11 17 57
விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1345
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 292,202,726.00
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 15 16 42 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


## ஈஸ்ரர் தினத் தாக்குதல் சம்பவம்...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமை யிலான எழுவர் கொண்ட நீதியரசர்கள் ஆயத்தால் இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் அடிப்படை மனித உரிமையை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதற்குப் பொறுப்புடையவர்கள் என்ற அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவை இழப்பீடாக செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன, 75 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, 75 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, 50 மில்லியன் ரூபாவையும், முன்னாள் குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர் சிசிர மெண்டிஸ், 10 மில்லியன் ரூபாவையும் இழப்பீடாக செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

அரசாங்கம், குறித்த இழப்பீட்டுத் தொகையை அறவிட்டு, குண்டுத் தாக்குதல்களில் இறந்தவர்களுக்காக, தலா ஒரு மில்லியன் ரூபா வீதம், அவர்களின் உறவுகளுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபா வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயங்களை மேற்பார்வையிட்டு உயர்நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

## நிலக்கரி இறக்குமதிக்கு...

காலத்தில் மக்கள் கடும் அசௌகரியங்களை சந்திக்க நேரிடும் என்று மின்சார சபையின் தலைவர் என்.எஸ்.இலங்ககோன் தெரிவித்தார்.

மின்சார சபையின் தற்போதை நிலைவரம் குறித்து நேற்று (12) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடப்பாண்டில் தொடர்ச்சியாக 24 மணிநேர மின் விநியோகத்தை மேற்கொள்வது தொடர்பில் 20 வரையில் முழுமையான கொள்கைத் திட்டங்களை மின்சார சபை அமைச்சுக்கு ஒப்படைத்துள்ளது. மழைவீழ்ச்சி கிடைக்கும்போதே எவ்வாறு மின் விநியோகத்தை மேற்கொள்வது, அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும்போது எவ்வாறு மின்விநியோகத்தை மேற்கொள்வது, அதன்போது டீசலை எவ்வாறு பயன்படுத்துவது, நெப்தாவை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற சகல விடயங்களும் விரிவாக அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதற்காக செலவாகும் நிதித் தொகை நுணுக்கமாக அந்த கொள்கைத் திட்டங்களில் உள்ளடக்கியிருக்கிறோம். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்த எமக்கு வளம் அவசியமாகும். நிலக்கரியை இறக்குமதி செய்ய நிதி அவசியப்படுகின்றது. நிலக்கரிக்கு பணம் செலுத்தும் விடயத்தில் கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

நேற்று (நேற்று முன்தினம்) நிலக்கரி கப்பலொன்று துறைமுகத்துக்கு வந்திருந்தது. ஆனால், நிதி பற்றாக்குறையினால் அந்த நிலக்கரியை துறைமுகத்திலிருந்து நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்கு இறக்குமதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 21 நிலக்கரி கப்பல்களுக்கு பணம் செலுத்தி அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம் இருக்கிறது. 33 நிலக்கரி கப்பல்களை எதிர்பார்த்திருக்கிறோம். அவற்றில் மிகுதி 12 கப்பல்களுக்கு வங்கிகளினூடாக நிதியை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். இதுவரையில் மின்சார சபையின் நான்கு விநியோகப் பிரிவுகளுக்கு நிதி விநியோகம் தடைப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு நிதி உதவி வழங்க வங்கிகள் முன்வரத் தயங்குகின்றன. நட்டம் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தினால் நிதி உதவி வழங்குகிறோம் என்று வங்கிகள் தெரிவிக்கின்றன. பணம் செலுத்தாவிட்டால் எரிபொருள் விநியோகிக்க மாட்டோம் என்று எரிபொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. மறுபுறம், ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நிதி பெற்றுக்கொடுக்கப்படாது என்றும் சுயமாக இதனைச் செய்யுமாறும் அரசாங்கம் எங்களுக்கு அறிவித்திருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கிடைக்காவிட்டால் நீண்ட பிரச்சினையை சந்திக்க நேரிடும் - என்றார்.

# எல்லை நிர்ணய தேசிய குழுவின் இறுதி அறிக்கையை வெளியிடுவதில் தாமதம்

## அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தகவல்



உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய தேசிய குழுவின் இறுதி அறிக்கையை வெளியிடுவதில் தாமதம் ஏற்படலாம் என அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மூன்று மாவட்ட செயலாளர்களின் பதவி உயர்வு, 4 மாவட்ட செயலாளர்களின் ஓய்வு, 17 புள்ளிவிபரவியல் அதிகாரிகளின் இடமாற்றம், தேர்தல் பணிகள் உள்ளிட்ட காரணங்களால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குழுவின் இறுதி அறிக்கை பெப்ரவரி 28ஆம் திகதி அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் தற்போதைய சூழ்நிலை காரணமாக எதிர்வரும் மார்ச் இறுதி வரை அந்த நடவடிக்கை தாமதமாகலாம் என மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

தனது குழுவின் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு அடுத்த வாரம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தேசிய எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கை தாமதமாகின்றமையானது தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்காது என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்திற்கான தேசிய குழு பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் நியமிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாக குறைப்பதே இந்தக் குழுவை நியமிப்பதன் நோக்கங்களில் ஒன்றாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய தேசிய குழுவில் ஜயலத் திசாநாயக்க, டபிள்யூ.எம்.எம்.ஆர்.அதிகாரி, கே.தவலிங்கம் மற்றும் ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாக செயற்படுகின்றனர்.




தமிழக அரசின் ஏற்பாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இடம்பெற்ற 'அயலகத் தமிழர்' தின விழாவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கலந்துகொண்டார்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை சதொச குறைப்பு

LANKA Sathosa
ලංකා සතොස லங்கா சதொச
Lowest Price | Your Place

நான்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நேற்று முதல் லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதன்படி சம்பா அரிசி ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 220 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைப் பச்சை (கெக்குலு) அரிசி ஒரு கிலோ 16 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 189 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நாட்டரிசி ஒரு கிலோ 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 198 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 240 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.
e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh

## தினசரி பலாபலன்கள்

13-01-2023 சுபகிருது வருடம் மார்கழி மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

மேஷம்: நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

ரிஷபம்: புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும். மனம் கண்டபடி அலையும்.

மிதுனம்: எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது, வாங்குவது கவனம்.

கடகம்: நீங்கள் கேட்காமலேயே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். துணிச்சலால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

சிம்மம்: குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பநிலைகள் உருவாகும்.

கன்னி: குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

துலாம்: தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

விருச்சகம்: தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

தனுசு: தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

மகரம்: பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

கும்பம்: திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்தநிலையை அடையும். வாய்ப்பேச்சால் வீண் பிரச்சினைகள்.

மீனம்: கூட்டு வியாபாரத்தில் அதிக இலாபம். தடைப்பட்ட திருமணத் திகதி உறுதிப்படுத்தப்படும் நாள்.

| | |
|---|---|
| திதி: | பி.ப 6.17 வரை பின் ஸப்தமி |
| நட்சத்திரம்: | உத்தரம் பி.ப 4.35 வரை பின் அத்தம் |
| யோகம்: | சித்தாமிர்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை: | தென் கிழக்குத் திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| நல்ல நேரம்: | மு.ப. 6.31 - 7.31 மணிவரை |
| ராகு காலம்: | 11.01 – 12.31 மணிவரை |
| எமகண்டம் : | 3.31 - 5.01 மணிவரை |
| குளிகை : | 8.01 - 9.31 மணிவரை |
| சந்திராஷ்டமம்: | கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# கோதுமை மா திருடியவர் வத்தளையில் கைது

வத்தளை – மாபோலயில் அமைந்துள்ள களஞ்சியசாலை ஒன்றில் 400 கிலோ கிராம் கோதுமை மாவைத் திருடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த முறைப்பாட்டிற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து வத்தளையை சேர்ந்த 33 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் 112,000 ரூபா பெறுமதியான 50 கிலோகிராம் கோதுமை மா அடங்கிய 08 பொதிகளைத் திருடியுள்ளார்.

அவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை வெலிசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தாமரை கோபுரத்தில் Future Zone ஐ டயலொக் அறிமுகப்படுத்துகின்றது – எதிர்காலத்தை இன்றே அனுபவிப்பதற்கு இலங்கையர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது

2022 ஜனவரி 12 (கொழும்பு)

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. அண்மையில் தாமரைர்; கோபுரத்தின் முதல் தளத்தில் திறந்துவைத்த அதிநவீன, புத்தாக்கங்களை மையமாகக் கொண்ட - Dialog Future Zone இல் (டயலொக் எதிர்கால வலயம்) அதிநவீன தொழில்நுட்பங்களை கண்டு அனுபவிப்பதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பை விடுத்துள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மேற்படி Dialog Future Zone திறந்திருக்கும். நுழைவு அனுமதி இலவசம்.


மேற்படி Dialog Future Zone பார்வையாளர்களுக்கு 5G இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) மற்றும் வேர்ச்சுவல் ரியாலிட்டி (Virtual Reality - VR) போன்ற தளங்களில் சமீபத்திய முன்னேற்றங்களை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகின்றது. டயலொக்கின் தற்போதைய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் ஆகியனவற்றை உள்ளடக்கூடிய ஸ்மார்ட் நகரங்களின் வளர்ச்சி மற்றும் நிலையான ஆற்றல் தீர்வுகளை செயற்படுத்துதல் போன்ற முன்முயற்சிகள் பற்றியும் பார்வையாளர்கள் இங்கு அறிந்து கொள்ள முடியும்.




**Dialog Future Zone திறப்பு விழா**

படத்தில் இடமிருந்து வலமாக:- டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் தயாரிப்பு மற்றும் சேவை கண்டுபிடிப்புப் பிரிவுத் தலைவர் சதுர பீரிஸ், டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் இயக்குனர் டத்தோ டொக்டர் நிக் ரம்லா நிக் மஹ்மூத், ஆசிஆட்டா குழும பெர்ஹாட் இன் கூட்டு செயற்குழு தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி விவேக் சூட், டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் இயக்குனர் அஸ்வான் கான், கொழும்பு தாமரைக் கோபுரத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க, கொழும்பு தாமரைக் கோபுரத்தின் தலைவர் பிரியந்த ரத்நாயக்க, ICTA பணிப்பாளர் மென்பொருள் வடிவமைப்பாளர் தசுன் ஹெகொட ஆகியோர்.

Dialog Future Zone இனை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும், தொழில்நுட்பத்தின் எதிர்காலம் பற்றிய ஒரு பார்வையும் அவர்களுக்கு நாம் வழங்குகின்றோம் என டயலொக் ஆசி ஆட்டா பி.எல்.சி. குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "டயலொக்கில் சாத்தியமானவற்றின் எல்லைகளை நோக்கியவாறு தொடர்ந்தும் நாம் முன்நோக்கி கொண்டு செல்கின்றோம், மேலும் Dialog Future Zone என்பது புதுமை மற்றும் முன்னேற்றத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும். இந்தக் கண்காட்சி அதைப் பார்வையிடும் அனைவருக்கும் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் கற்றலை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.



Humanoid Robot greeting visitors

மேலும், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பிற பங்காளர்களுடன் இணைந்து பயிலரங்குகள், விரிவுரைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளையும் இந்த Dialog Future Zone வழங்கும். இது மாணவர்களுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் ஏற்றது. இதன் நடவடிக்கைகள் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத் தகைமைகள் மற்றும் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்கிலானதாக அமைந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"Future Zone பொதுமக்களுக்கு உத்வேகம் மற்றும் கல்விக்கான ஆதாரமாக மட்டுமல்லாமல், தொழில் வல்லுநர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான தளமாகவும் இருக்கும் எனவும் நாங்கள் நம்புகின்றோம்" என வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

Dialog Future Zone ஆனது, சமீபத்திய ஸ்மார்ட் ஹோம் மற்றும் இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT) தீர்வுகள், முன்னணி பல்கலைக்கழகங்களின் டயலொக் '5G Innovation Centre' சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நிறுவனத்தின் புத்தாக்கப் பிரிவான 'Innovation Foundry' ஆகியவற்றினால் இயக்கப்படும் புதுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் ஆகியனவற்றை கொண்டிருக்கும்.



AI powered Digital Twin demonstration

# திருமலை – கண்டி பிரதான வீதியில் விபத்து; இலங்கை மின்சார சபைக்கு பாரிய நட்டம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கண்டி பிரதான வீதி தபால் அலுவலகத்துக்கு எதிரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை மின்சார சபைக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் திருகோணமலை மின் அத்தியட்சகர் குமாரசுவாமி தெரிவித்தார்.

மின்சார சபைக்கு பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் திருகோணமலை மின் அத்தியட்சகர் குமாரசுவாமி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையிலிருந்து திருவண்ணாமலை மாநகர சபைக்கு வேகமாக சென்று கொண்டிருந்தபோது வாகனத்தில்



திருகோணமலை மாநகர சபைக்கு சொந்தமான கெப் வாகனம் நேற்று (12) மாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான மின் கம்பத்துடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த வாகன விபத்தினால் சற்று நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை ஏற்பட்ட கோளாறு காரணமாக இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் சாரதி மற்றும் கணக்காளர் காயம் அடைந்துள்ள நிலையில், விபத்து தொடர்பிலான விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீதிமன்ற சிறையிலிருந்தவருக்கு பீடி வழங்க முற்பட்டவருக்கு சிறை

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் நேற்று (12) நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் புகையிலை கலந்த பீடி ஒரு கட்டை வழங்க முற்பட்ட ஒருவருக்கு கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது நீதிமன்ற சிறைக்கூண்டிலிருந்த ஒருவருக்கு இன்னுமொரு நபர் புகையிலை கலந்த பீடியை வழங்குவதற்கு முற்பட்டுள்ளார்.

இவ்வேளையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு, உடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதவான் குறித்த நபருக்கு 1500 ரூபா அபராதமும் மூன்று மாத கடூழிய சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜனவரி 13ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!

உலகின் நான்காவது பெரிய ஜனநாயக நாடான பிரேஸிலில் புதிய ஜனாதிபதிக்கு எதிராக நடைபெற்றுள்ள வன்முறைகள் உலகத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருக்கின்றன. அது ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டோருக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

தென்னமெரிக்க கண்டத்திலுள்ள இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும் பரப்பளவும் இயற்கை வளமும், 21.5 கோடி மனித வளமும் கொண்ட நாடு பிரேஸில். இது 2022ஆம் ஆண்டு சர்வதேச நிதியத்தின் கணிப்பின்படி, உலக பொருளாதாரத்தில் 1.90 இலட்சம் கோடி டொலர் உள்நாட்டு உற்பத்தியுடன் 12ஆம் இடம் வகிக்கிறது.

பிரேஸிலின் நவீன அரசியல் 1800களில் தொடங்குகிறது. போர்த்துக்கல் நாட்டின் குடியேற்ற நாடாக இருந்த பிரேஸில், கொலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டாலும், 1822 முதல் 1889 வரை முடியாட்சி தொடர்ந்தது. அடுத்து, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி குடியரசாக அறிவித்தது. 1889 முதல் 1930 வரையிலான அந்த ஆட்சி முதல் குடியரசு எனப்படுகிறது. அதன்பிறகு ஆயுதப் புரட்சியால் ஆட்சியைக் கைப்பற்றிய சர்வாதிகாரி வர்க்கஸ் 15 ஆண்டுகள் ஆண்டார். 1946 முதல் 1964 வரை மீண்டும் குடியரசு ஆட்சியும், அதைத் தொடர்ந்து 1964 முதல் 1985 வரை இராணுவ ஆட்சியும் அமைந்தன.

1985 முதல் 1990 வரை 'புதிய குடியரசு காலம்' எனப்படுகிறது. அதையடுத்து பல கட்சி ஆட்சி முறை 1990 முதல் தொடர்ந்து வருகிறது. பிரேஸில் ஜனநாயக இயக்கம், தொழிலாளர் கட்சி பழைமைவாத விடுதலை கட்சி, பிரேஸில் சோஷலிசக் கட்சி உள்ளிட்ட கட்சிகளிடையிலான அதிகார மோதலாக பிரேஸிலின் தற்போதைய அரசியல் களம் மாறியிருக்கிறது.

26 மாநிலங்கள், தலைநகரப் பகுதி ஆகியவற்றைக் கொண்ட கூட்டாட்சிக் குடியரசான பிரேஸிலில் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தல் நடைபெறுகிறது. 1990களுக்குப் பிறகே இந்நாட்டில் ஜனநாயக வீச்சு பெருகியிருக்கிறது. ஆனால், அங்கு இன்னமும் ஜனநாயகம் பண்படவில்லை. ஆட்சியில் நிலவும் ஊழலும், அதிகார மோதல்களும், கொள்கையற்ற கட்சித் தாவல்களும், வெட்கமற்ற கூட்டணி மாற்றங்களும் பிரேஸிலின் அரசியலில் நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளன.

இதற்கு முன்னர் 2011 முதல் 2016 வரை முதல் பெண் ஜனாதிபதியாக இருந்தவர் பிரேஸில் ஜனநாயக இயக்கத்தைச் சார்ந்த தில்மா ரூசுஃப். அவர் மீது ஊழல் புகார் கூறப்பட்டதால் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டு, மைக்கேல் டெமெர் ஜனாதிபதியானார். அதையடுத்து 2019 முதல் 2022 வரை, பழைமைவாத விடுதலைக் கட்சியைச் சார்ந்த ஜெயிர் பொல்சொனாரோ ஜனாதிபதியாகத் தேர்வானார்.

2022 ஒக்டோபரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தொழிலாளர் கட்சியைச் சார்ந்த இனாசியோ லூலா டிசில்வா 50.90 வீத வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தேர்வானார். இவர் முந்தைய ஜனாதிபதி பொல்சொனாரோவை (49.10 % வாக்குகள்) குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

இனாசியோ லூலா டி சில்வா ஏற்கெனவே பிரேஸில் ஜனாதிபதியாக இருமுறை இருந்தவர். 2003 முதல் 2010 வரை அவர் ஜனாதிபதியாக இருந்தபோது நாட்டின் வறுமையைப் போக்க பல நடவடிக்கைகளை எடுத்தார். ஆனாலும், நாட்டின் அரசு எண்ணெய் நிறுவனமான பெட்ரோப்ராஸ் தொடர்பான ஒப்பந்தங்களில் முறைகேடு செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு 2018இல் கைதுசெய்யப்பட்டார். 580 நாட்கள் சிறைவாசத்துக்குப் பிறகு, நீதிமன்றம் வாயிலாக தண்டனை இரத்தான பிறகே மீண்டும் அரசியல் களத்துக்கு வந்தார் லூலா டி சில்வா.

தற்போது பிரேஸிலின் அரசியல், லூலா டி சில்வா - பொல்சொனாரோ என்ற இரு துருவங்களிடையே சுழல்கிறது. இதனை இடதுசாரி அரசியல் கட்சி, பழைமைவாத அரசியல் கட்சி என்ற இரு சித்தாந்தங்களின் மோதலாகவும் காணலாம்.

கடந்த ஒக்டோபரில் நடந்த தேர்தலின் முடிவை ஏற்க மறுத்து வரும் பழைமைவாத விடுதலைக் கட்சியினர், ஜனவரி 1இல் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற லூலா டி சில்வாவுக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 8) பெரும் போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர். தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தியதில் முறைகேடு நிகழ்ந்துள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அன்று பிரேஸில் நாடாளுமன்றம், உயர்நீதிமன்றம், ஜனாதிபதி மாளிகை ஆகிய இடங்களை முற்றுகையிட்ட பொல்சொனாரோ ஆதரவாளர்கள் அலுவலகங்களை சூறையாடியுள்ளனர்.

ஆயுதப் படையினரின் தீவிர முயற்சியால் 1200 பேர் கைது செய்யப்பட்ட பிறகே அந்நாட்டில் அமைதி திரும்பியிருக்கிறது. தற்போது முன்னாள் ஜனாதிபதி பொல்சொனாரோ உடல்நிலையைக் காரணம் காட்டி அமெரிக்கா சென்றுவிட்டார். அங்கு அவர் சிகிச்சை பெறுகிறார். அவரை, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஆதரிக்கிறார். தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், லூலா டி சில்வாவை ஆதரிக்கிறார்.

சென்ற 2021இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வென்று ஜோ பைடன் ஜனாதிபதியாகத் தேர்வானபோது, அதை டிரம்ப் ஏற்க மறுத்ததும், குடியரசுக் கட்சியினர் அமெரிக்க நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி வன்முறையில் ஈடுபட்டதும் அனைவரும் அறிந்ததே. அதேபோன்ற சூழல் தற்போது பிரேஸிலிலும் நிலவுகிறது. அமெரிக்க அரசியலின் தாக்கம் பிரேஸிலும் தொடர்வதாகத் தெரிகிறது.

ஆட்சி மாற்றத்தை இயல்பாக, சுமுகமாக அடைய உதவுவதே நாடாளுமன்றத் தேர்தல் முறையின் சிறப்பு. தேர்தல் தோல்வியை ஆட்சியாளர்கள் ஏற்க மறுக்கும் போக்கால் ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைகிறது.

இலங்கையிலும் சில வருடங்களுக்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வென்றபோது, பதவியில் இருந்த ஜனாதிபதி மஹிந்தவின் ஆதரவாளர்கள் மஹிந்த பதவியில் தொடரவேண்டுமெனக் கூறி வீதிக்கு இறங்க முற்பட்டனர். அதன் பின்னர் இப்போதைய ஜனாதிபதி ரணில் அதில் தலையிட்டு மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பாக பதவியிலிருந்து வெளியேற உதவி நிலைமையை சமரசப்படுத்தினார்.

தேர்தல் வெற்றி தோல்விகள் வரலாம். ஆனால், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பென்று மக்களின் இறுதி முடிவுக்கு தலைவணங்குவதே ஜனநாயகத்திற்கு அழகு.

# சீனாவின் சீண்டல்கள்!...



சியாங்கேஷேக்கின் சர்வாதிகார ஆட்சியை சீனாவிலிருந்து விரட்டியடிக்க மாசேதுங் மக்களைத் திரட்டி 6,000 மைல் எழுச்சி நடைப்பயணத்தை இடைநிற்காமல் நடத்தி சீன மக்களிடையே புரட்சிகர சிந்தனையைத் தூண்டினார்.

ஒரு நடைப்பயணம் ஒரு பெரிய நாட்டின் அரசியலையே புரட்டிப் போட்டது என்றால் அது சீனாவில்தான் நடந்தது. சித்தாந்த ரீதியாகவும் பெரும் மாற்றம் மக்களிடையே ஏற்பட்டது. அதற்குக் காரணம் மாவோ என்று அழைக்கப்படும் மாசேதுங்கின் நடைப்பயணம்தான்.

மக்கள் மாவோவை முழுமையாக நம்பினர். விரட்டப்பட்ட சியாங்கேஷேக் கூட்டத்தினர் தப்பியோடி தாய்வானில் தங்கினர். அந்த தாய்வானை, ஹொங்கொங்கை பிரிட்டிஷாரிடமிருந்து பெற்றதற்குப் பின் சீனா எப்படி தனதாக்கிக் கொண்டதோ அதைப் போல் தாய்வானை கபளீகரம் செய்திட இப்போது சீனா முயன்று வருகிறது. போர் விமானங்களை தாய்வான் எல்லைக்குள் பறக்கவிட்டு மிரட்டி வருகிறது. அமெரிக்க சபாநாயகர் தாய்வான் நாட்டிற்கு எப்படிச் செல்லாம், அவரை எப்படி தாய்வான் அனுமதிக்கலாம் என்று சீனா மிரட்டி வருகிறது.

சீனாவின் பலத்தையும், மக்கள் உணர்வையும் பரப்பளவையும் மக்கள்தொகையையும் கணக்கில் கொண்டுதான் மாசே துங் "சீனா ஒருநாள் உலகை ஆளும்'' என்று அகங்காரத்தோடு சொன்னார். அங்கே ஆணவம் வெளிப்பட்டது.

அதே சீனாவைப் பார்த்து, "சீனா உறங்குகிறது, நன்றாக உறங்கட்டும் அது விழித்தால் உலகமே அதிரும்'' என்று, யாராலும் வெல்ல முடியாது என்று போற்றப்பட்டு, வாட்டர் லூ என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்ட மாவீரன் நெப்போலியன் ஒருமுறை கூறினான்.

ஜவஹர்லால் நேரு இந்தியப் பிரதமராக இருந்தபோது இராணுவ பலம் குறைவாக இருந்த 1962இல் மாவோ திடீரென்று இந்திய தேசத்தின் மீது போரை ஏவிவிட்டு சில ஆயிரம் உயிர்களைப் பலி வாங்கி, இந்தியாவின் சுமார் 30,000 சதுர கி.மீ. நிலத்தை அபகரித்து கொண்டார். அப்போது சுதந்திரமடைந்து சில காலமே ஆனதால், இந்தியா முழுமையாக தன்னைத் தயார்படுத்திக் கொள்ளாத நிலை. இந்திய கம்யூனிஸ்டுகளால் இன்றைக்கும் போற்றப்படும் மாசேதுங் மனசாட்சியின்றி இந்திய மண்ணை அபகரித்தார்.

தற்போது சீன ஜனாதிபதியாக இருக்கும் ஷி ஜின்பிங், சரியான பதவிப் பித்தர். முடிந்துபோன தனது ஆட்சிக் காலத்தை தனது ஆதரவாளர்களை வைத்து சர்வாதிகாரத்தனத்தோடு நீடித்துக் கொண்டவர். எங்காவது அவருக்கு எதிரான குரல் கேட்டால், அக்குரல் நிரந்தரமாக நிறுத்தப்படும்.

உதாரணமாக, சீனாவில் ஜனநாயகம் கேட்டு 1989இல் மாணவச் செல்வங்கள் தியானென்மென் சதுக்கத்தில் ஒன்று திரண்டு குரல் கொடுத்தனர். அப்போது, பீரங்கி வண்டிகளை ஏற்றிப் போராடிய ஆயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

மாணவர் தலைவர்கள் என்று அறியப்பட்டவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டு ஆண்டுக் கணக்காக சிறையிலேயே வாடிக் கொண்டிருக்கிறார்கள். பலர் காணாமலே போய்விட்டனர்.

1997இல் ஹொங்கொங், பிரிட்டிஷாரிடமிருந்து சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் ஹொங்கொங் மக்கள், சீனாவுடன் சேர்வதை விரும்பவில்லை. ஆனால், சீனா தனக்கு வேண்டிய அதிகாரியை வைத்து சில அடக்குமுறை சட்டங்கள் மூலம் சீனாவுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் குரல்வளையை நசுக்குகிறது.

சீனாவின் வெறித்தனத்தின் உச்சம், தியானென்மென் சதுக்கத்தில் மாணவர்கள் கொல்லப்பட்ட நினைவு நாளன்று, அதற்காக ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட சிலையை அதிரடியாக அகற்றி எறிந்தது. அதேபோல் லிங்னான் பல்கலைக்கழகத்தில் தியானன்மென் படுகொலையை நினைவுகூரும் வகையில் இருந்த சுவர் ஓவியத்தையும் அகற்றியுள்ளது.

இந்தியாவிடம் அவ்வப்போது சீனா வம்பிழுத்து வருகிறது. சமீப காலத்தில் 5,000 ச.கி.மீ. இந்தியப் பகுதியை சீனா ஆக்கிரமித்துள்ளதாக தகவல்கள் கசிகின்றன. சீனாவிற்கு வேலையே அண்டை நாடுகளை விழுங்கி தன் வசமாக்கிக் கொள்வதுதான். ரஷ்யா, கனடாவிற்கு அடுத்து மிகப்பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடாக சீனா உள்ளது. சீனாவின் தற்போதைய மொத்த நிலப்பரப்பில் 43 வீதம் பிற நாடுகளை ஆக்கிரமித்து கைப்பற்றியதுதான்.

1947ஆம் ஆண்டு மங்கோலியாவை சீனா இராணுவ பலத்தால் கைப்பற்றியது. 1949ஆம் ஆண்டு உய்குர் முஸ்லிம்கள் அதிகம் வசித்த கிழக்கு துர்கிஸ்தான் பகுதியை ஆக்கிரமித்தது. தற்போது சீனர்களை அங்கே குடியமர்த்தி சீனப் பகுதியாகவே அதனை மாற்றிவிட்டது. உய்குர் இஸ்லாமிய மக்கள் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இதனை அமெரிக்க உட்பட 47 நாடுகள் கண்டித்து ஐ.நாவிடம் முறையிட்டுள்ளன.

1950ஆம் ஆண்டு திபெத்தை சீனா ஆக்கிரமித்தது. பின்னர் போரில் இங்கிலாந்திடம் இழந்த ஹொங்கொங்கையும் மீட்டு தன்வசம் ஆக்கிக் கொண்டது. தற்போது அருணாசல பிரதேசத்தையும் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்தியாவைச் சேர்ந்த அமைச்சர்கள் அருணாசல பிரதேசம் சென்று வந்தால், எப்படி இந்திய அமைச்சர் சீனாவின் அங்கமான அருணாசல பிரதேசம் வரலாம் என்று கண்டனம் தெரிவிப்பதை சீனா வழக்கமாக கொண்டுள்ளது.

2020 ஜூன் மாதம் 15ஆம் திகதி இரவில் லடாக் பகுதியில் கல்வான் பள்ளத்தாக்கில் திடீரென்று சீன வீரர்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி இந்திய இராணுவத்தினர் மீது திடீர் தாக்குதல் நடத்தி எல்லையை அபகரிக்க முயன்றனர்.

இந்திய வீரர்கள், சீன வீரர்களைவிட எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதும் சீனாவின் கொடூரத் தாக்குதலை துணிவோடு எதிர்கொண்டு சீன இராணுவத்தினரோடு கடுமையாக எதிர்தாக்குதல் புரிந்ததால் சீனா பின்வாங்கியது.

எதிரிகளின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தாலும் எண்ணத்தில் உறுதியும், நாட்டுப்பற்றும் இருந்தால் எதிரி எத்தனை பலசாலியாக இருந்தாலும் அவனை விரட்டி அடித்து விடலாம் என்பதை இந்திய இராணுவத்தினர் காட்டினர்.

இருந்தாலும் இந்தியா பக்கத்திலும் 20 பேர் உயிரிழந்தனர். தன்பக்கம் இழப்பு ஏதுமில்லை என சீனா முதலில் மறுத்தது. பின்பு சில நாட்களில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்றது. ஆனால், அமெரிக்கா புலனாய்வு செய்ததில் சீனா பக்கம் 42 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என்ற உண்மை தெரியவந்தது.

அன்று வாங்கிய அடி சீனாவிற்கு பெருத்த அவமானம் ஆகிவிட்டது. இலங்கை அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து இந்தியப் பெருங்கடலில் தனது உளவு கப்பலை நிறுத்தி வைத்தது சீனா. இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கை அதனை அனுமதித்தது.

அந்தக் கப்பலில் இருந்த சீன வீரர்கள், இலங்கை வீரர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளனர். யுத்த காலத்தில் எப்போதும் இந்தியாவிற்கு ஆதரவாக இலங்கை இருந்ததில்லை. 1962 சீன - இந்திய யுத்தத்தில் இலங்கை சீனாவுக்குத்தான் வெளிப்படையாக ஆதரவு தந்தது.

இந்திய - பாகிஸ்தான் யுத்தம், வங்கதேசப் பிரிவினையின்போது நடந்த யுத்தம் இவற்றில் இலங்கை பாகிஸ்தானுக்கு ஆதரவு அளித்தது. மேலும், பாகிஸ்தான் விமானங்களுக்கு எரிபொருள் வழங்கி உதவி செய்தது இலங்கை.

2017ஆம் ஆண்டு டோக்லாம் பகுதியில் சீன இராணுவத்தினர் அத்துமீறி சாலையமைக்க முயன்றதையும் இந்திய இராணுவம் தடுத்து நிறுத்தியது. யாங்வாங்-5 என்ற போர்க் கப்பலை இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு தொடர்ந்து அனுப்பி இந்திய செயற்பாட்டை கண்காணித்து வருகிறது. அருணாசல பிரதேச பகுதியில் சீனா தொடர்ந்து போர் ஒத்திகை நடத்தி இந்தியாவை மிரட்டி வருகிறது.

இந்நிலையில், அருணாசலப் பிரதேசத்தின் தவாங் பகுதியில் யாங்ட்சி என்ற இடத்தின் சில முக்கிய பகுதிகளில் டிசம்பர் 9, 2022 அன்று சீன வீரர்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பயங்கர ஆயுதங்களுடன் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைய முயன்றுள்ளனர்.

அப்போது குறைவாக இருந்த இந்திய வீரர்கள் சீன வீரர்களை சமாளித்துக்கொண்டிருக்க, சற்று நேரத்தில் 600க்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் குவிந்து சீன இராணுவத்தினரை ஓட ஓட விரட்டியடித்துள்ளனர். நாடு பிடிக்க வருபவனை விட நாட்டைக் காப்பாற்ற நினைப்பவன் வீரம் மிகுதியானது.

எல்லைக் கோட்டு பகுதி முழுவதும் சீனா தனது படைகளைக் குவித்து வருகிறது. இதற்கு சவால் விடும் வகையில் அமெரிக்க - இந்திய இராணுவம் இணைந்து உத்தரகண்ட் பகுதியில் சீன எல்லைக்கு அருகே போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. சீனா இதற்கு பொய்யான கண்டனம் தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்ல, லடாக்கில் உள்ள பாங்காங் திசோ ஏரியில் இந்தியா - சீனா இரு நாடுகளுக்கும் சம பங்கு இருக்கிறது என்பது தெரிந்தும் அடாவடியாக சீனா 3 கிலோ மீற்றருக்கு சாலையமைத்து வருவது இந்தியாவிற்கு விடுக்கப்படும் மறைமுக மிரட்டலாகும்.

சீன ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் ஐந்து முறை சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். தமிழகத்தின் மாமல்லபுரத்தில் சீன ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் விருந்தளித்தார். ஆயினும், சீனாவின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

**வி.பி.கலைராஜன்,**
**முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்.**

**நன்றி - தினமணி**

## இன்றைய நாளில்..

- 1815 – கண்டிப் போர்கள்: பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
- 1888 – தேசிய புவியியல் கழகம் வொஷிங்டனில் நிறுவப்பட்டது.
- 1964 – கொல்கத்தாவில் இந்து-முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- 1993 – வேதி ஆயுத உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
- 2001 – எல் சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 800 பேர் உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்



# மஸ்கெலியா வனப்பகுதியில் தீ சமூகவிரோதிகள் கைவரிசை



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கிராப்பு தோட்டப் பகுதியிலுள்ள மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கத்தை சூழவுள்ள வனப்பகுதி நேற்று முன்தினம் (11) தீப்பற்றியுள்ளது. விஷமிகளே இவ்வாறு சட்டவிரோதமாக தீ வைப்பதாகவும் இதனால் அப்பகுதியிலுள்ள ஏராளமான உயிரினங்கள் அழிந்து போயுள்ளதாகவும் அப்பகுதியின் வன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சமூக விரோத சக்திகள் இவ்வாறு மாலை 6 மணிக்கு மேல் தீ வைத்துள்ளதால் தீயை அணைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் சுமார் 10 ஹெக்டேயர் பரப்பளவு எரிந்த நிலையில் உள்ளது. மேலும் காட்டு விலங்குகள் மற்றும் பறவைகள் என்பன அழிவதுடன் தோட்டக்குடியிருப்புப் பகுதிக்குள் விலங்குகள் நுழையவும் வாய்ப்பு உருவாகின்றது.

இனி வரும் காலங்களில் வனப்பகுதிக்குத் தீ வைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். இவ்வாறு வனப்பகுதிக்குத் தீ வைப்பவர்களை அடையாளம் காண அப்பகுதியிலுள்ள அனைத்து மக்களும் உதவி செய்ய வேண்டுமென வன பாதுகாப்பு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மலையகத்தில் குறுந்தூர சேவையில் ஈடுபடுத்தப்படும் பழுதடைந்த பஸ்கள்

(செ.தி.பெருமாள்)

மலையகத்தின் பெரும்பாலான இடங்களில் குறுந்தூர சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ்கள் முறையாக சீர்செய்யப்படாத நிலையில் பாவனையில் உள்ளதாகவும் இதனால் பாடசாலை மாணவர்கள், பயணிகள், நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோர் பாரியளவில் சிரமங்களுக்குள்ளாகி வருவதாகவும் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மலையகத்தில் ஒருசில தனியார் பஸ்கள் பயணிக்கும்போது இடைநடுவில் பாகங்கள் உடைந்து நிறுத்தப்படுவதாகவும் முறையாக சக்கரங்கள் இணைக்கப்பட்டிருப்பதில்லை எனவும் அடிக்கடி சக்கரங்கள் பழுதடைந்து நடுவீதியில் நீண்டநேரம் தாங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் மலையகத்தின் பெரும்பாலான வீதிகளில் மேடு பள்ளங்களும் குழிகளும் அதிகம் உள்ளதால் சக்கரங்கள், பிரேக் உட்பட பஸ்ஸின் பாகங்கள் அனைத்திலும் பழுதுகள் ஏற்படும் நிலையில் பாரிய உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது பொங்கல் பண்டிகைக் காலம் என்பதால் அதிகளவில் பயணிகளை தனியார் பஸ்கள் ஏற்றிச் செல்கின்றன. இவை பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் போக்குவரத்துப் பொலிஸார் இதுபோன்ற பஸ்களை சேவையிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





*ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய நுவரெலியா பிராந்திய ஆங்கில மொழி மூல தலைமை இணைப்பாளர் கமலா வில்ஷன் கடந்த 31ஆம் திகதி ஓய்வுபெற்றார். இதனை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாந்தகுமார், ஆங்கில மொழி மூல இணைப்பாளர்கள் தம்மிக்க கோதாபத்திரண, தேசானி சேனாதீர ஆகியோரால் அவர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (தலவாக்கலை நிருபர்)*

# போலி தங்கக்கட்டியை விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

புதையல் தோண்டியதால் கிடைத்த தங்கக்கட்டி எனக்கூறி தங்க முலாம் பூசப்பட்ட இரும்புக் குண்டு ஒன்றை ஏமாற்றி விற்க முனைந்த இரண்டு சந்தேகநபர்களை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

அமுஹேன்யான பிரதேசத்தில் இவர்கள் இதனை விற்பனைக்காக வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து வியாபாரிகள் போன்று வேடம் தரித்துச் சென்ற பூகொடை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் இவர்கள் இருவரையும் கைதுசெய்ததுடன் போலி தங்கக்கட்டியையும் மீட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அமுஹேன்கந்த மற்றும் ஜேன்யார் ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

இதனைப் புதையல் ஒன்றிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட தங்கக்கட்டி எனவும் 20 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும் சந்தேகநபர்கள் அதிரடிப்படை அதிகாரிகளுடன் பேரம் பேசியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் இவர்கள் மீது வழக்கு தொடரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தெற்காசியாவிலேயே மிகவும் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கை உருவாகப் போகின்றது

## சமூகநல வைத்திய அதிகாரி சஜீஹா





(கண்டி நிருபர்)

தெற்காசியாவில் சிறந்த வளங்களைக் கொண்ட ஒரு நாடாக இருந்த இலங்கை, எதிர்காலத்தில் தெற்காசியாவின் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக மாறும் நிலை உருவாகுமென பாத்ததும்பறைப் பிரதேச சமூக நல வைத்திய அதிகாரி எம்.எஸ்.எஸ்.சஜீஹா தெரிவித்தார். நேற்று முன்தினம் (11) மடவளை சீனியர் சிட்டிஸன் அமைப்பினர் ஒழுங்குசெய்த தாய்மாருக்கான போசாக்குணவு பற்றிய செயலமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வருடங்களுக்கு முன்பு வரை ஆகக் குறைந்த இறப்பு வீதத்தை பதிவு செய்த நாடாகவும் சிறந்த சுகாதார வசதிகள், இலவச சுகாதாரம், இலவச கல்வி என்பவற்றைக் கொண்ட நாடாகவும் இலங்கை இருந்தது. ஆனால் அந்த நிலை தொடருமா எனக் கூற முடியாதுள்ளது.

மேற்கத்திய முறையில் புரதம், மாப்பொருள், கனியுப்புகள் என்ற வகையில் நிறை உணவு வரையறுக்கப் படுகிறது. ஆனால் ஆயுர்வேதத்தில் ஆறு வகையான சுவைகளை வைத்தே நிறை உணவு தீர்மானிக்கப்படுகிறது. ஆறு சுவைகளையும் கொண்ட உணவுகளை தினம் சேர்த்துக் கொள்வதால் இயல்பாகவே நிறையுணவு கிடைக்கிறது. எனவே தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட சுவையை மட்டும் கொண்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். மேலும் இயற்கையான இயல்பை செயற்கை உணவால் வளர்க்க முற்படும்போது உடற்கலங்கள் அதனை நிராகரிக்கும். இதுவே தொற்றா நோய்கள் உருவாகக் காரணமாகிறது.

செயற்கை சுவையூட்டிகள், செயற்கை வாசனைகளை உடல் ஏற்க மறுக்கும். அதுவே பின்னர் இருதய நோய், சிறுநீரக நோய், தோல் நோய் அல்லது புற்று நோயாக வரலாம். இதுபோன்ற குறைபாடுகள் ஏற்பட முன்னர் தேவையற்ற உணவுப் பழக்கங்களைத் தவிர்த்து உடலைப் பாதுகாக்க வேண்டும். துரித உணவுகளில் இவ்வாறான செயற்கை அம்சங்கள் நிறைய உண்டு. எனவே துரித உணவுகளை நம்பி நோயாளிகளாக வேண்டாம் என்றார்.

**செலான் வங்கி (பீ.எல்.சி.) – கொச்சிக்கடை கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை**

**1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஏல விற்பனை**

தங்கொட்டுவவில் அமைந்துள்ள 'பீலைன் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட்' என்பவர்கள் கடப்பாடுடையவர்களாகவும் / ஈடுவைத்தவர்களாகவும் என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு இ.எஸ்.பி.குணதுங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 ஜனவரி மாதம் 31ஆம் திகதியிடப்பட்ட 35ஆம் இலக்க ஈட்டுமுறி மீது செலான் வங்கி பீ.எல்.சியில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது,

**அட்டவணை**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் நளின் விக்கிரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015 நவம்பர் மாதம் 17ஆம் திகதியிடப்பட்ட 1142/ 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 1 என அடையாளமிடப்பட்டு (1044 / 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணியின் மறு அளவீடு மற்றும் இடைக்காலப் பிரிவாகும்) பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு எட்டு ஏக்கர் (ஏ8.றூ0.பே0) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் நளின் விக்கிரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015 நவம்பர் மாதம் 17ஆம் திகதியிடப்பட்ட 1142/ 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 2 என அடையாளமிடப்பட்டு (1044 / 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணியின் மறு அளவீடு மற்றும் இடைக்காலப் பிரிவாகும்) பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு ஒரு ஏக்கர் மூன்று றூட் ஐந்து பேர்ச்சஸ் (ஏ1.றூ3.பே5) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

மேற்குறிப்பிட்ட 1142/ 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 மற்றும் லொட் 2 ஆகியவை ஓர் இடைக்கால உட்பிரிவாகும், இது கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலத்தின் மறு அளவீடாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் நளின் விக்கிரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015 ஜூன் மாதம் 3ஆம் திகதியிடப்பட்ட 1142 / 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 1 என அடையாளமிடப்பட்டு 10/1982ஆம் இலக்கம் மற்றும் 20/2982 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 6 லொட் 6D2 மற்றும் லொட் 6D1 என அடையாளமிடப்பட்டு இணைக்கப்பட்ட நிலத்தின் மறு அளவீடான பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு ஒன்பது ஏக்கர் மூன்று றூட் ஐந்து பேர்ச்சஸ் (ஏ9.றூ3.பே5) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

மேற்குறிப்பிட்ட 1044 / 2015ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள லொட் 6E லொட் 6D2 மற்றும் லொட் 6D1 என அடையாளமிடப்பட்ட காணி மறு அளவீடாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. கன்னங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 நவம்பர் மாதம் 6ஆம் திகதியிடப்பட்ட 10/1982ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 6 என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு நான்கு ஏக்கர் மூன்று றூட் ஐந்து பேர்ச்சஸ் (ஏ4.றூ3.பே5)விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 மே மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 20/1982ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 6D1 என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு இரண்டு ஏக்கர் (ஏ2.றூ0.பே0)விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராமசேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. கன்னங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 நவம்பர் மாதம் 6ஆம் திகதியிடப்பட்ட 10/1982ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 6D2 என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு மூன்று ஏக்கர் மூன்று றூட் ஐந்து பேர்ச்சஸ் (ஏ3.றூ3.பே5) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாலைக்காக ஒதுக்கப்பட்டதன் மூலம் மேலாகவும் கீழாகவும் மற்றும் நேராகவும் வழியின் உரிமையுடன்.

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 மே மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 20/1982ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 6F என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு இரண்டு ஏக்கர் ஒரு றூட் இருபத்து ஐந்து பேர்ச்சர்ஸ் (ஏ2.றூ1.பே25)விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 மே மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட 20/1982ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 7 என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு ஒரு ஏக்கர் இரண்டு றூட் இருபத்து ஏழு பேர்ச்சர்ஸ் (ஏ1.றூ2.பே27) விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

3. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வடக்கு துனகஹா பத்துவே, திவுலபிட்டிய நகர சபை எல்லைக்குள் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் எல்லைக்குள் படல்கம 56 கிராம சேவகர் பிரிவிற்குள் படல்கமயில் உள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. கன்னங்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982 நவம்பர் மாதம் 6ஆம் திகதியிடப்பட்ட 10/1982 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பீட்ரைஸ் எஸ்டேட்' என்று அழைக்கப்படும் காணி லொட் 7B என அடையாளமிடப்பட்டு காணித்துண்டின் அளவு இருபத்து ஐந்து பேர்ச்சஸ் (ஏ0.றூ0.பே25)விஸ்தீரணமான காணி மற்றும் கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துமாகும்.

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட் 19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிக்காட்டலுக்கு ஏற்ப நடத்தப்படும்.

காணிக்குப் பிரவேசிக்கும் வழி:- படல்கம சந்தியில் இருந்து படல்கம - கிருஉல்ல வீதி ஊடாக நீர்கொழும்பு பக்கமாக 1.0 KM வரை பயணித்து கார்பன் சந்தி வரை சென்று வலது பக்கத்தில் உள்ள 30 அடி அகலமான வீதி ஊடாக "HeyCarb" வரை சென்று இடது பக்கமுள்ள முதலாவது வீதியில் 375 மீற்றர் சென்ற பிறகு அந்த வீதியின் கடைசியில் இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்: 2018.11.02ஆம் திகதி இலங்கைச் ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2018.10.26ஆம் திகதி டெய்லி மிரர், லங்காதீப மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் செலுத்தும் விதம்:- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 3,000
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் ரூ. 500
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90 வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

**பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி.,**
**இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2456463, 011-2456473.**

★ எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமா பிரியதர்ஷனி கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**
**இல. 9-i, ஹைலெவல் வீதி, சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071 4318252 – 011-2173282**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மலையக தியாகிகளுக்கான நினைவேந்தல் நிகழ்வு







யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று (12) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மலையக தியாகிகளுக்கான நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழக பிரதான நினைவுத்தூபியில் நடைபெற்றது.

மலையகத் தமிழர்களுக்கான தொழிற்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமை போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளும் குறித்த நினைவேந்தலில் நினைவுகூரப்பட்டதோடு 1930இற்கு பிற்பட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்கு பற்றி உயிர் நீத்த அனைத்து தோட்டத் தொழிலாளர்களையும் "மலையக தியாகிகள்" என அடையாளப்படுத்துகின்ற நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு போராட்டத்தில் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையின்பேரில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டு தனது உயிரை தியாகம் செய்த முல்லோயா கோவிந்தனின் உயிர்த்தியாகம் ஜனவரி 10ஆம் திகதி நடந்தது.

மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த இத்திகதி 'மலையக தியாகிகள்' தினமாக அனுஷ்டிக்கப்படுவதற்கு கடந்த 2019 டிசம்பர் 15ஆம் திகதி தலவாக்கலை டெவனில் நடைபெற்ற நினைவேந்தலின்போது தீர்மானிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு இந்த நிகழ்வு மஸ்கெலியாவில் நடைபெற்றது. 2021ஆம் ஆண்டு பத்தனை சந்தியில் நடைபெற்றது. 2023ஆம் ஆண்டு கொட்டகலை கொமர்சியல் பகுதியில் இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனை மையப்படுத்தியே குறித்த நினைவேந்தல் கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியங்களினால் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

மலையக வாழ் மக்களின் அறப்போராட்டங்களில் உயிர்நீத்த தியாகிகளின் நினைவுருவப்படத்திற்கு ஈகைச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், மலையக மாணவர் ஒன்றியத்தின் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பெயர் மாற்றம்**

**உக்குவல பிரதேச செயலகத்திற்குட்பட்ட மானாம்பொட கிராம அதிகாரி பிரிவில் (359) உக்குவல மானாம்பொட இல. 78/26 எனும் முகவரியில் வசிக்கும் அப்துல் லதீப் முஹம்மது மஹ்ரூப் (Abdul Latheef Muhammad Mahroof) ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சியில் (3098) மஹ்ருப் எனவும் தேசிய அடையாள அட்டையில் (652573037 ) முழுப்பெயராக அப்துல் லதீப் முஹம்மது மஹ்ரூப் எனவும் இருப்பதால் இப்பெயரிலேயே அழைக்கப்படுகிறேன் எனவும் சகல ஆவணங்கிலும் இப்பெயரே பாவிக்கப்படுகிறது எனவும் இப்பெயரிலேயே சகல ஆவணங்கிலும் ஒப்பம் இடுகிறேன் எனவும் பொதுமக்களுக்கும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசுக்கும் அறிவித்துக்கொள்கிறேன்**

**இப்படிக்கு**
***அப்துல் லதீப் முஹம்மது மஹ்ரூப்***

# நுவரெலியாவில் கட்டுப்பணம் செலுத்திய ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி




(எஸ்.கணேசன்)

எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதிக்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தலைமையிலான ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, நுவரெலியா மாவட்டத்திலும் தனித்துப் போட்டியிடவுள்ளது.

இதற்கான கட்டுப்பணம் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி குணரத்ன தலைமையிலான குழுவினரால் நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று (12) செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன,

"நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளுக்கும் எமது கட்சி வாழைப்பழச்சீப்பு சின்னத்தில் போட்டியிடும். எமது கட்சியில் இனவாதம், மதவாதம் கிடையாது. இது மக்களுக்கான கட்சி. அதனால்தான் அனைத்து இன மக்களும் எம்மிடம் இணைந்து போட்டியிடுகின்றனர்.

மக்கள் மாற்றத்தைக் கோருகின்றனர். எனவே, ஊழல்களில் ஈடுபடும் அரசியல்வாதிகளை மக்கள் விரட்ட வேண்டும். நல்லவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

அதேவேளை, தேர்தல் ஒத்திவைக்கப் படமாட்டாது என தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று தெரிவித்தனர். நீதிமன்ற தீர்ப்பு ஒன்றின்மூலம் தேர்தலை பிற்போடலாமே தவிர, வேறு வழிகளில் அதனைச் செய்ய முடியாது'' - என்றார்.





இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப்பணம் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (விஜயரத்தினம் சரவணன்)

# சுந்தரம் டிவகலாலா யாழில் காலமானார்



(திருமலை)

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நேற்று காலமானார். கடந்த சில மாதங்களாக கடுமையாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்றைய தினம் (வியாழக்கிழமை) யாழ். கொட்டடியிலுள்ள அவரது இல்லத்தில் மரணமடைந்துள்ளார்.

வடமராட்சி பகுதியிலுள்ள வல்வெட்டி கிராமத்தில் சுந்தரம் சௌந்தலை பெற்றோருக்கு 1942ஆம் ஆண்டு மூத்த புதல்வராக அவதரித்தார். 1968ஆம் ஆண்டு சிவமலர் என்பவரை மணம் முடித்த இவர், அம்பிகை, பிரேமினி, நிஷங்கா, காயத்திரி ஆகிய 4 புத்திரர்களுக்கும் தந்தையாவார்

வல்வெட்டி அமெரிக்க மிஷன் ஆரம்பப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற டிவகலாலா யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கல்லூரியான யாழ். இந்துக் கல்லூரியில் தனது இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரியாவார்.

1971ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தேறி திருகோணமலை கச்சேரியில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1971, 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் அநுராதபுரத்திலும், 1972, 1973ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொலன்னறுவையிலும் தொடர்ந்து உதவித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பொலன்னறுவை, திருகோணமலை, மன்னார் ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றி 1995ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மகாணத்தின் கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டு 1996ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக அன்றைய வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவால் நியமிக்கப்பட்டு 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டுவரை 5 வருடங்கள் செயலாளராக கடமையாற்றி பல்வேறு அளப்பரிய சேவைகளைச் செய்த சிறந்த நிர்வாகியாக மதிக்கப்பட்டார்.

தனது ஓய்வின் பின் வடக்கு, கிழக்கு மாகாண மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றங்களைக் கொண்டுவரவும் ஆறுதல் என்ற அமைப்பை நிறுவி அதன் பணிப்பாளராக இருந்து கடந்த பல வருடங்களாக அளப்பரிய சேவைகளை செய்த கல்விச் சேவையாளராக போற்றப்பட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை சனிக்கிழமை இல.127, ஆஸ்பத்திரி வீதி (கொட்டடி), யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

### போதைப்பொருளுக்கு அடிமையாகி

# புனர்வாழ்வு பெற்றவர் மரணம்

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா நிருபர்)

போதைப்பொருளுக்கு அடிமையாகி வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் நேற்று (12) தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் வசித்துவந்த 2 பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையாகிய நிலையில், அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி புனர்வாழ்வுக்காக வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரது உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார். சட்ட வைத்திய அதிகாரியால் அவரது சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதிகரித்த ஐஸ் போதைப் பொருள் உட்கொண்டமையால் நுரையீரல் மற்றும் உடற்பாகங்களில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மரணமேற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் அவரது குடும்பஸ்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வடமாகாண இளைஞர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை

## இளைஞர்கள் விவகார அமைச்சர் ரொஷான் யாழில் பேச்சு






வடமாகாண இளைஞர்களுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்தும் மாகாண மட்ட கலந்துரையாடல் இளைஞர்கள் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இளைஞர்களுக்கான வலுவான பொருளாதாரம், ஆரோக்கியமான இளைஞர் தலைமுறை, தேசிய பொருளாதாரத்திற்கான வலுவான இளைஞர் தொழில்முனைவு, இளைஞர் திறன் மற்றும் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் இளைஞர்களுக்கான புதிய வேலைகள், இளைஞர்கள், இளைஞர்கள் சமூக பள்ளி, இளைஞர் நாடாளுமன்ற அதிகாரம், இளைஞர்கள் விளையாட்டு பொருளாதாரத்தில் மேம்படுத்தல் ஆகிய துறைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், யாழ். மாவட்ட பிரதம திட்டமிடல் பணிப்பாளர் நிக்கலஸ்பிள்ளை உட்பட வடமாகாண விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# ஓய்வூதியப் பணத்தைப் பெற வங்கிக்கு சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ராமன் தர்மலிங்கம் (வயது 81) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலிலுள்ள தனது வீட்டிலிருந்து திருநெல்வேலி பகுதியிலுள்ள மக்கள் வங்கி கிளையில் ஓய்வூதியப் பணத்தை எடுக்கச்சென்றவர் வங்கியின் முன்னால் பலாலி வீதியை கடக்க முற்பட்ட வேளை , வீதியில் வேகமாக வந்த மோட்டார்சைக்கிளில் மோதி படுகாயமடைந்தார்.

அவரை அவ்விடத்தில் நின்றவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 400 போதை மாத்திரைகளுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஆணொருவரும் பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை சோதனையிட்ட போது, அவர்களிடமிருந்து 400 போதை மாத்திரைகள் (40 கார்ட்) மீட்கப்பட்டுள்ளன.

அதனையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்ட இருவரையும் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# மாடுகளை திருடி வந்த குற்றத்தில் இளைஞரொருவர் யாழில் கைது

யாழ்ப்பாணம் இருபாலை பகுதிகளில் மாடுகளைத் திருடி விற்பனை செய்துவந்த சந்தேகத்தில் நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கல்வியங்காட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருபாலை பகுதியிலுள்ள வீடொன்றினுள் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடுகள் திருடப்பட்டிருந்தன. அது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்நிலையில், திருடப்பட்ட மாடுகளை வேறொரு நபருக்கு விற்க முயன்றபோது மாடுகளின் உரிமையாளரால் மாடுகள் அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.



அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மாடுகளைத் திருடிய குற்றத்தில் இளைஞரை கைதுசெய்ததுடன் மாடுகளையும் மீட்டுள்ளனர்.

கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு பகுதிகளில் இடம்பெற்ற மாடு திருட்டுச் சம்பவங்களுடன் சந்தேகநபருக்கு தொடர்புகள் இருப்பதாகவும், அது தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### யாழில் தாலிக்கொடியில்

# மோசடி

(யாழ். நிருபர்)

தங்கத்துக்குப் பதிலாக பித்தளையில் தாலி மற்றும் கொடி செய்துகொடுத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 2016ஆம் ஆண்டு தாலி மற்றும் அதற்கான கொடி என்பவற்றை ஐந்தரை பவுணில் செய்வதற்கு, சந்தேகநபரிடம் பணம் கொடுத்து தாலி மற்றும் கொடியை செய்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

7 வருடங்களின் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே தமது தாலி மற்றும் கொடி என்பவை தங்கம் அல்ல பித்தளை என்பதனை கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை கைதுசெய்து, மேலதிக விசாரணைக்காக தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை, யாழில். கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் தங்கத்துக்குப் பதிலாக பித்தளையில் தாலி மற்றும் கொடி செய்துகொடுத்து ஏமாற்றிய சம்பவமொன்று பதிவாகியிருந்தது.

இந்துக்களின் திருமணங்களின்போது தாலி மற்றும் கொடி என்பவை திருமணத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் "பொன் உருக்கு" என நிகழ்வு ஏற்பாடு செய்து , தாலிக்கொடி செய்துகொள்வார்கள். அத்துடன், தாலிக்கொடி வணக்கத்திற்கு உரியதாகவும் , மரியாதைக்கு உரியதாகவும் பார்க்கின்ற வழக்கமும் உண்டு. அதனால் அவற்றை தங்கம் தானா என சோதனை செய்து பார்க்கும் வழக்கம் இருப்பதில்லை.

பொருளாதார நெருக்கடிகளால் அடகு வைப்பதற்காகவோ அல்லது பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவோ வங்கிகளுக்கு கொண்டுசெல்லும் போதே அங்கு தாலி மற்றும் கொடியின் தரம் சோதிக்கும்போதே ,அவற்றில் மோசடிகள் இடம்பெற்று இருந்தால் தெரியவரும் சூழல் காணப்படும்.

# கொட்டகலை பிரதேச சபைக்கு சுயேச்சைக் குழு கட்டுப்பணம்



(எஸ்.கணேசன்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுவொன்று நேற்று கட்டுப்பணம் செலுத்தியது.

சமூக செயற்பாட்டாளரும், அரசியல் ஆய்வாளருமான ராமன் செந்தூரன் தலைமையிலான குழுவினரே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தினர்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஏனைய சபைகளிலும் தமது அணி சுயேச்சையாக களமிறங்கும் எனவும், அதற்கான கட்டுப்பணம் ஓரிரு நாட்களுக்குள் செலுத்தப்படும் எனவும் ராமன் செந்தூரன் கூறினார்.

''மலையக அரசியல் வாதிகள், எமது மக்களை திட்டமிட்ட அடிப்படையில் ஏமாற்றி வருகின்றனர். இளைஞர்களையும் சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர். எனவே, இந்நிலைமை மாற வேண்டும். நாம் மாற்றியமைப்போம். சமூக மாற்றத்துக்கான பயணத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்கவே நாம் தேர்தலில் போட்டியிடுகின்றோம். மக்கள் எமக்கு ஆசிவழங்குவார்கள்'' - எனவும் செந்தூரன் குறிப்பிட்டார்.

# தங்கமெனக் கூறி பித்தளையில் தாலி செய்துகொடுத்தவர் யாழில் கைது

தங்கத்துக்குப் பதிலாக பித்தளையில் தாலி மற்றும் கொடி செய்துகொடுத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு தாலி மற்றும் அதற்கான கொடி என்பவற்றை ஐந்தரை பவுணில் செய்வதற்கு, சந்தேகநபரிடம் பணம் கொடுத்து தாலி மற்றும் கொடியைச் செய்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

7 வருடங்களின் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னரே தமது தாலி மற்றும் கொடி என்பவை தங்கம் அல்ல பித்தளை என்பதை கண்டறிந்துள்ளனர்.

அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சந்தேகநபர் தலைமறைவாகி இருந்தார்.

இந்நிலையில், காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தலைமறைவாகியிருந்த சந்தேக நபரை கைதுசெய்து, மேலதிக விசாரணைக்காக தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# நாட்டின் அடுத்த 25 ஆண்டுகளுக்காக புதிய சீர்திருத்தத்துடன் 75ஆவது தேசிய சுதந்திர தின விழா

## ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் நாடளாவிய ரீதியில் பல சமய மற்றும் கலாசார நிகழ்வுகள்

அடுத்த 25 ஆண்டுகளுக்காக அரசாங்கத்தின் புதிய சீர்திருத்தத் திட்டத்துடன் 75ஆவது தேசிய சுதந்திர தினத்தை பெருமையுடன் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

"நமோ நமோ மாதா - நூற்றாண்டுக்கு ஒரு படி" என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த பெருமைமிகு விழாவில், 2048ஆம் ஆண்டு 100ஆவது சுதந்திர தினம் வரை மாறாத அரச கொள்கையை அமுல்படுத்தும் வகையில், அடுத்த 25 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் புதிய சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் அறிவிக்கப்படவுள்ளது.

தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா டி.எஸ்.சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்திலுள்ள தேசிய மாவீரர்களின் உருவச்சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

75ஆவது தேசிய சுதந்திர தின விழாவை முன்னிட்டு நாடு முழுவதும் பல கலாசார மற்றும் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும்.

அதன்படி, பௌத்த சமய நிகழ்வுகள், பெப்ரவரி 02ஆம் திகதி மாலை ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெறவுள்ளதுடன், அன்றிரவு விக்டோரியா அணைக்கு அருகில் 9 மணிக்கு தர்ம பிரசங்கமும் ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் காலை அன்னதான நிகழ்வும் நடைபெறும்.

பெப்ரவரி 04ஆம் திகதி காலை 6.30 மணிக்கு மருதானை பெற்றிமா தேவாலயத்தில் கத்தோலிக்க மத வழிபாடுகளும், அதே நேரத்தில் காலிமுகத்திடல் கிறிஸ்தவ தேவாலயத்தில் கிறிஸ்தவ மத வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

இந்து சமய நிகழ்வுகள், பெப்ரவரி 03 ஆம் திகதி காலை திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு பெரியபள்ளிவாசலில் முஸ்லிம் சமய வழிபாடுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலும் பௌத்த மற்றும் இந்து சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பெப்ரவரி 4ஆம் திகதி முற்பகல் 6.30 மணிக்கு கொழும்பு - 3, பொல்வத்தை தர்மகீர்த்தியாராம விகாரையில் பௌத்த சமய நிகழ்வும் கொழும்பு - 4, பம்பலபிட்டி புதிய கதிரேசன் கோவிலில் இந்து மத நிகழ்வுகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் மார்ச் மாதம் ஸ்ரீ தலதா கண்காட்சியும், கொழும்பில் மே மாதம் கபிலவஸ்து தாது கண்காட்சியும், இடம்பெறவுள்ளது. சீனாவிலிருந்து கொண்டு வரப்படும் தாது கண்காட்சி ஜூன் மாதம் அநுராதபுர நகரில் நடைபெறவுள்ளதுடன், பாகிஸ்தானிலிருந்து கொண்டுவரப்படும் தாது கண்காட்சியொன்றை ஜூலை மாதம் தென் மாகாணத்தில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட கலாசார கலை விழாவான "லங்காரலங்கா" பெப்ரவரி 03ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 750 கலைஞர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது.

யாழ். கலாசார நிலையம், பெப்ரவரி 11ஆம் திகதி காலை ஜனாதிபதி தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், யாழ். கலாசார நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கும் கலாசார ஊர்வலம் யாழ். நகரின் ஊடாக வீதியுலா வந்து யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகில் நிறைவடையும். (பழைய பஸ் நிலையம்) அங்கு கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன், அன்று இரவு அதே இடத்தில் சிறப்பு இசை நிகழ்ச்சியும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து நடன மரபுகளையும் ஒன்றிணைத்து, வீதியுலா வரும் ஊர்வலம் எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி இரவு கண்டி நகரிலுள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் பூரண பங்கேற்புடன் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திரம் தொடர்பான 30 நிமிட குறும்படமொன்றைத் தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் கலையரங்குகளிலும் காண்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இளைஞர் சமுதாயத்தை இலக்குவைத்து 'சுதந்திரம்' என்ற தலைப்பில் குறும்படங்கள், தேசபக்தி பாடல்கள் மற்றும் ஓவியப் போட்டிகள் உள்ளிட்ட வடிவமைப்புப் போட்டியொன்றை மே மாதம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் மாபெரும் ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சி சிரேஷ்ட ஓவியக் கலைஞர் எச்.எஸ்.சரத் தலைமையில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய அருங்காட்சியக திணைக்களம், மத்திய கலாசார நிதியம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இலங்கையின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் கலைப்பொருட்கள் கண்காட்சி பெப்ரவரி 04ஆம் திகதிமுதல் பெப்ரவரி 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தேசிய சுதந்திர தின விழாவின்போது பத்திரிகை செய்திகள் மற்றும் பிற கட்டுரைகள் அடங்கிய புத்தகம் வெளியிடப்படவுள்ளது. 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட முத்திரை, சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் தேசபிதா டி.எஸ்.சேனாநாயக்க, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் சுதந்திர பாகிஸ்தானின் முதல் பிரதமர் முஹம்மது அலி ஜின்னா ஆகியோரின் உருவப்படங்களை உள்ளடக்கிய அரியவகை விசேட நினைவு முத்திரையும் வெளியிடப்படவுள்ளது. மேலும் ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு நினைவு நாணயமும் வெளியிடப்படும்.

ஜனவரி 01ஆம் திகதிமுதல் அமுல்படுத்தப்பட்ட நகர்ப்புற வன எண்ணக்கரு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படுவதுடன், ஸ்ரீலங்கா ரெலிகொம் அனுசரணையுடன் பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையிலான சுதந்திர தின சைக்கிள் சவாரி ஜனவரி 28ஆம் திகதிமுதல் பெப்ரவரி 01ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இது தவிர, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, பொது பூங்காக்கள், தேசிய விலங்கியல் திணைக்களத்திற்கு - வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய தேசிய பூங்காக்கள் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரிய தேசிய பூங்காக்கள் என்பன சுதந்திர தினத்தில் பொதுமக்களுக்கு இலவசமாக திறக்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 02 மாதங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ வீதம் அரிசி வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், குறித்த வேலைத்திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2023ஆம் ஆண்டு 75ஆவது சுதந்திர தினத்துடன் ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் புதிய சீர்திருத்தப் பயணத்தை 2048ஆம் ஆண்டு 100ஆவது சுதந்திர தினம் வரையில் மாற்றமில்லாத அரச கொள்கையாக மாற்றுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். எதிர்வரும் 25 வருடங்களுக்கான திட்டமும் இந்த தேசிய சுதந்திர தினத்துடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படும்.

இதன்படி, பல புதிய நிறுவனங்கள் மற்றும் சட்டங்கள் அறிமுகப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதுடன், இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் ஒரு வரலாற்று நிறுவனம், பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனம் , பெண்கள் மற்றும் பாலினம் தொடர்பான நிறுவனம் என்பன நிறுவப்படும்.

அரச மற்றும் அரசாங்கக் கொள்கைப் பல்கலைக்கழகம், விவசாய ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம், காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் என்பனவும் நிறுவவுதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு, பாலின சமத்துவச் சட்டம், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டம், குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், சமூக நீதிக்கான ஆணைக்குழுச் சட்டம், காடுகளை மீள உருவாக்கல் மற்றும் விருட்சப் பாதுகாப்புச் சட்டம் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

மகாவலி கங்கை, சிங்கராஜ வனம், சிவனொளிபாத பிரதேசம், ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ், ஆதாம் பாலம் போன்ற இயற்கை வளங்களின் பாதுகாப்புக்காக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கடல் வள ஆய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் புதிய சட்டங்கள் மற்றும் முதுராஜவெல பாதுகாப்புச் சட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதில் 75 நகர்ப்புற காடுகளின் திட்டம் மற்றும் கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கொழும்பில் 1996 வீடுகள் கட்டும் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, தேசிய இளைஞர் தளம் உட்பட பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.




ஜனவரி 15 ஞாயிறு பகல் 12.30 மணிக்கு...

# உப்புவெளிப் பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் உயிர்வாயு நிலையத்துக்கு கிழக்கு ஆளுநர் விஜயம்





(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண சபைக்கு சொந்தமான திருகோணமலை - உப்புவெளிப் பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பாரியளவிலான உயிர்வாயு அலகு நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கடந்த செவ்வாய்க்கிழமை (10) விஜயம் செய்தார்.

இப்பணிகளுக்காக 32 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது சுமார் 67 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பண்ணையில் மின்சாரம் தயாரிக்கும் திறனுடையது. அது மட்டுமல்லாமல், அதிலிருந்து வெளிவரும் திரவ உரத்தை சந்தைக்கு விடுவதன் மூலம் பெருமளவு வருமானம் ஈட்ட முடியும்.

இதன்போது ஜேர்மனியில் இருந்து வரவழைக்கப்பட்ட சில போயர் வகை ஆடுகளைப் பார்வையிடும் வாய்ப்பு ஆளுநர் மற்றும் குழுவினருக்குக் கிடைத்தது. இந்த பண்ணையானது கிழக்கு மாகாணத்தில் காலநிலைக்கு ஏற்றவகையில் முதன்முறையாக இந்த ஆடுகளை கலப்பினப்படுத்தியமையும் விசேட அம்சமாகும்.

ஒரு கலப்பின ஆட்டின் எடை சுமார் 70 கிலோ இருக்கும். இதன் மூலம் ஆடுகளை வளர்க்கும் விவசாயிகள் சிறந்த வருமானத்தைப் பெற முடியுமென மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முதுபண்டா, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் டொக்டர் எம்.பாசி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக பொறுப்பேற்றார் பொறியியலாளர் நஸார்





(மாளிகைக்காடு நிருபர்)

கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக ஆளுநரினால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் உதுமாலெவ்வை அஹமட் நஸார் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் இலங்கை பொறியியலாளர் சேவை

வகுப்பு-Iஐச் சேர்ந்த நீர்ப்பாசனத்துறையில் 25 வருடங்களுக்கு மேலான சேவை அனுபவத்தைப் பெற்ற சிரேஷ்ட அதிகாரியாவார். நீர்ப்பாசனப் பொறியியலாளராக, பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளராக மற்றும் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் பொறியியலாளர் யூ.எல்.ஏ.நஸார் உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளராகவும் கடமையாற்றியவர்.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் (தேசிய பாடசாலை) கல்வி கற்றதுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயந்திரவியல் விஞ்ஞானமாணிப் பட்டத்தை சிவில் துறையில் பெற்றவர். நிர்மாண முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பை மேற்கொண்டவர். மேலும், இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அங்கத்தவரான இவர் பட்டயப் பொறியியலாளரும் ஆவார்.

# வாழைச்சேனை - கல்முனை பிராந்திய மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு



(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மாவட்ட வாழைச்சேனை பிரதேச மீனவர்களுக்கும் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய மீனவர்களுக்கும் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்திலும், கடற்கரைகளிலும் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் முரண்பாடுகள், பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பேச்சுவார்த்தை மாளிகைக்காடு அந்-நூர் கலாசார மண்டபத்தில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.ரியாஸின் ஒருங்கமைப்பில் நேற்று முன்தினம் (11) மாலை இடம்பெற்றது.

உலமாக்கள், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜெகத், அம்பாறை மாவட்ட மீன்பிடித்திணைக்கள உதவிப் பணிப்பாளர், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்; தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ், மாளிகைக்காடு அந்-நூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.எம்.பௌசர், வாழைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன உப தலைவரும், பொலிஸ் பரிசோதகருமான ஏ.அமீரலி, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் சங்கம், சம்மேளனம், சமாசம் போன்றவற்றின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்குழு நிர்வாகிகள் உட்பட பலரும் மத்தியஸ்தம் செய்து மீனவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான தீர்வொன்றை முன்வைத்தனர்.

படகு தரித்தல், மீன் விற்பனை, போதையொழிப்பு, மீனவர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், மீன் வியாபாரிகளுடனான உறவுகளை பேணுதல், போன்ற விடயங்களை ஆராய்ந்து அவற்றுக்கு இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தமொன்றை அமைப்பது தொடர்பிலும், இரு தரப்பினதும் அங்கத்துவத்துடன் கூடிய கண்காணிப்பு நிர்வாகக் குழுவை அமைப்பது தொடர்பிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், போதைப்பொருள் பயன்படுத்திய மீனவரினால் கல்முனை மீனவர்கள் தாக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வாழைச்சேனை மீனவர்கள் பாதிக்கப்பட்ட கல்முனை மீனவர்களிடம் வருத்தம் தெரிவித்தனர். இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் ஒற்றுமையாக கடற்றொழிலில் ஈடுபடும் பொறிமுறை தொடர்பிலும் பேசப்பட்டு இருதரப்பையும் இணக்கத்துடன் சமரசம் செய்து வைக்கப்பட்டது.

## போடியார் புலம்பல்!



**அண்ணன் மஹிந்தவுக்கும் தம்பி கோட்டாவுக்கும் கனடா பொருளாதாரத் தட போட்ட சங்கதி ஊடகங்களில பரபரப்பா பேசப்படுகுது எலுவா..?**

**அப்பா போறபோக்கப் பாத்தா அடுத்ததாக சிவப்பு சால்வை மூத்த அண்ணன் சாமல், சின்னத்தம்பி பசீல், சின்ன மகன் நாமல் எல்லா ராஷபக்ச கொம்பனியும் இனி பூண்டோட சர்வதேச தட போடாம நம்மட புலம்பெயர் தமிழர்கள் உட மாட்டாங்க போல!**

# மு.காவின் அம்பாறை மாவட்ட செயலாளராக சமால்தீன் நியமனம்

(சாய்ந்தமருது நிருபர்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நீண்டகாலப் போராளியும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.சி.சமால்தீன், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டதையிட்டு எனது வாழ்த்துகளையும் ஆசிகளையும் உரித்தாக்குகிறேன் என்று அக்கட்சியின் தவிசாளரும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2023ஆம் ஆண்டுக்கான கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு கடந்த செவ்வாய்க்கிழமை (10.01.2023) மருதமுனையில் இடம்பெற்றது. இதன்போது கட்சியின் தேசிய தலைவராகவும் மாவட்ட செயற்குழுவின் தலைவராகவும் விளங்குகின்ற ரவூப் ஹக்கீமினால் கட்சியின் மாவட்ட செயலாளர் நியமனம் அறிவிக்கப்பட்டது. எனது பாடசாலைக் காலத்தில் இருந்தே கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட எனது அன்புக்குரிய சமால்தீன் தற்போதுவரை கட்சியின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வரும் ஒருவர். 2006இல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் கட்சியை சிலர் நீதிமன்றங்களுக்குக் கொண்டு சென்றபோது, கட்சி நெருக்கடி நிலையை சந்தித்தது. அவ்வேளையில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் என்று தவிசாளர் அப்துல் மஜீட் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீளக் கையளித்தல்

## அக்கரைப்பற்றில் செயலமர்வு



(கோணாவத்தை நிருபர்)

தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் பல்வேறு திணைக்களங்களாலும் படையினராலும் சுவீகரிக்கப்பட்ட விவசாயிகளின் பாரம்பரிய காணிகளை எவ்வாறு மீளப்பெறலாம், அரசின் உணவு உற்பத்திக்கு எவ்வாறு உதவலாம் என்பது பற்றி ஆராயும் செயலமர்வு அண்மையில் அக்கரைப்பற்று 'மங்கோ கார்டன்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்செயலமர்வுக்கு மனிதவள எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைவர் கே.நிஹால் தலைமை வகித்தார். திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த தமது பூர்வீக நெற்காணிகளை இழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் மற்றும் சமூக ஆவலர்களும் கலந்துகொண்டனர்.

சட்டபூர்வமான ஆவணங்களுடன் தமது பாரம்பரிய விவசாயத்தை மேற்கொண்டு வந்த இவ்விவசாயிகள் நாட்டில் அப்போது நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது சொந்த வயல்களுக்குச் செல்ல முடியாத ஒரு நிலை உருவாகியிருந்தது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வனப்பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், ஹிங்குராணை சீனிக்கூட்டுத்தாபனம் மற்றும் அரச படை போன்றன நாம் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த இப்பிரதேசங்களை தமது பரிபாலனத்தின் கீழ் கொண்டு வந்துள்ளதாகவும் விவசாயப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்நடவடிக்கை எமது நிலத்தில் நாம் பயிர்செய்ய முடியாத நிலையொன்றைத் தோற்றுவித்துள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு இப்பிரச்சினையை அணுகி தீர்வு காணலாம் என்பதை வளவாளர்களின் ஆலோசனைக்கு அமைவாக இங்கு சமர்ப்பணம் செய்தனர். இது தொடர்பாக அலசி ஆராய்ந்த விவசாயப் பிரதிநிதிகள் இப்பிரச்சினைகளுக்கு சுமுகமாகத் தீர்வு கண்டு தம்மை மீண்டும் தமது விவசாயக்காணிகளில் விவசாயச் செய்கையில் ஈடுபடுத்த அனுமதிப்பதன் மூலம் ஜனாதிபதியின் தேசிய உணவு உற்பத்திக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க முன்வருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டுகின்றனர்.

# சமுர்த்தி லொத்தர் சீட்டிழுப்பில் கறவைப் பசு வழங்கிவைப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் கறவைப் பசு வழங்கிவைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அக்கரைப்பற்று 11ஆம் பிரிவில் வசிக்கும் சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் கறவைப்பசு மற்றும் அதற்கான ஆவணங்களைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஜே.எம்.நிஃமதுல்லாஹ், முகாமைத்துவ உதவியாளர் எம்.எஸ்.எம்.சன்ஸீர், பிரிவு உத்தியோகத்தர் ஏ.பி.எம்.பாரி மற்றும் பயனாளி குடும்பத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருள் பாவனை குறித்து பிள்ளைகளின் நடத்தையில் பெற்றோர் விழிப்புடன் இருக்கவேண்டும்

## கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்





(எருவில் நிருபர்)

பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கி அவர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கும் பணியில் சமூக விரோதிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனையிட்டு பெற்றோர் விழிப்புடன் இருப்பதுடன், தத்தமது பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை தினமும் அவதானிக்க வேண்டும். அத்துடன் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் சமூக விரோத கும்பல்கள் பற்றிய தகவல்களை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸாருக்கு வழங்கவேண்டியது எமது தார்மீக கடமையாகுமென கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் குறிப்பிட்டார்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் க.பொ.த. உ/த மாணவர் தினவிழா நேற்று முன்தினம் (11) அதிபர் செ.கலையரசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட விஞ்ஞான வள நிலைய முன்னாள் பணிப்பாளர் நா.புள்ளநாயகம் கௌரவ அதிதியாகவும் கல்முனை தமிழ் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அங்கு கலாநிதி மூ.கோபாலரெத்தினம் மேலும் உரையாற்றுகையில், நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் உயர்தர வகுப்பில் நான்கு பாடத்துறைகள் மாத்திரமே இருந்தன. தற்போது கல்வியமைச்சு அறுபதுக்கும் மேற்பட்ட பாடத்துறைகளை உயர்தர வகுப்பில் அறிமுகம் செய்துள்ளது. எனவே, மாணவர்கள் விரைவாக தொழில் வாய்ப்பையும் அதிக வருமானத்தையும் பெறக்கூடிய துறைகளைத் தேர்ந்தெடுத்து கற்க வேண்டும்.

விலைமதிக்க முடியாத சிலைகளாக மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்களின் கழுத்தில் உங்களது அதியுச்சமான பெறுபேறுகள் மாலைகளாக விழவேண்டும். இதுவே யாவரினதும் எதிர்பார்ப்பாகும். இவ்விழாவில் இப்பிராந்தியத்தில் அதிகளவான பொறியியலாளர்களையும் துறைசார் அறிஞர்களையும் உருவாக்கிய நா.புள்ளநாயகத்தை கௌரவ அதிதியாக அழைத்து கௌரவித்தமையினால் இவ்விழா மேலும் பெருமையடைகின்றது என்றார்.

# திக்கோடையில் நீர் விநியோகத் திட்டம்



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியிலுள்ள வீட்டுத்திட்டப் பகுதிக்கான குடிநீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) காலை நடைபெற்றது.

அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகி, அதிதிகளின் உரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து குடிநீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இவ்வீட்டுத் திட்டப் பகுதியில் பல வருடங்களாக குடிநீர் இல்லாமல் பாரிய அசௌகரியங்களுக்கு மத்தியில் இப்பிரதேசவாசிகள் குடிநீர் பெற்றுவந்த நிலையில், போரதீவுப்பற்று பிரதேச சபையின் ஊடாக குடிநீர் இணைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது. மட்டு. போரதீவுப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் யோ.ரஜனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழன் வணிக உலகம்
www.thamilan.lk Thamilan Business World thamilanbusiness@gmail.com

# SLT-MOBITEL அனுசரணையில் நுவரெலியா கொல்வ் சம்பியன்ஷிப்




இலங்கையில் விளையாட்டுகளை ஊக்குவிக்க அர்ப்பணித்துள்ள SLT-MOBITEL இன் அனுசரணையில் இடம்பெற்ற நுவரெலியா கொல்வ் கழக சம்பியன்ஷிப் – 2022 போட்டிகள் சிறப்பாக நிறைவுற்றன.

நுவரெலியா க்ளப் கோர்ஸில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் சம்பியனாக குசல் ஜோன்பிள்ளை தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இரு தினங்களில் இவர் 157 புள்ளிகளை மொத்தமாகப் பெற்றிருந்தார்.

இரண்டாமிடத்தை சுஹைப் சங்கானி 164 புள்ளிகளுடன் பெற்றுக்கொண்டார். முதல் நாளில் சிறந்த புள்ளிகளைப் பெறுபவருக்கு வழங்கப்படும் வருடாந்த தங்கப் பதக்கத்தை ஜோன்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

இந்தப் போட்டியில் 80இற்கும் அதிகமான கொல்வ் விளையாட்டு வீரர்கள் மற்றும் சங்கானி (A), ஜோன்பிள்ளை (B), ரெஹான் அமிர்தையா (C) மற்றும் கலாநிதி ஏ. அமுனுகம (மாஸ்டர்ஸ்) ஆகியோர் தமது பிரிவுகளில் வெற்றியீட்டியிருந்தனர்.

மூன்று நாள் நிகழ்வு கிரஹாம் சின்கிளயார் கிண்ணத்துடன் ஆரம்பமாகியதுடன், அதனைத் தொடர்ந்து வருடாந்த தங்கப் பதக்க நிகழ்வு மற்றும் பிரதான நிகழ்வான க்ளப் சம்பியன்ஷிப் நிகழ்வுடன் முடிவடைந்தது.

கொல்வ் சமூகத்தைச் சேர்ந்தவர்களை இணைத்து வலுவூட்டுவதற்கான வர்த்தக நாமத்தின் அர்ப்பணிப்பின் பிரகாரம் கழக சம்பியன்ஷிப் – 2022 நிகழ்வுக்கு SLT-MOBITEL அனுசரணை வழங்கியிருந்தது. வருடத்தின் முற்பகுதியில், அறிமுக ஈகிள்ஸ் நான்குமுனை கிண்ணம் கொல்வ் போட்டித்தொடர் – 2022 நிகழ்வுக்கும் SLT-MOBITEL அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த ஏற்றுமதியாளருக்கான வெள்ளி விருதை வென்ற Farmchemie




Farmchemie தனியார் நிறுவனம் தேசிய ஏற்றுமதி சபை (NCE) ஏற்பாடுசெய்த 2022ஆம் ஆண்டுக்கான சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருது வழங்கும் விழாவில் முதல் தடவையாக கால்நடை உற்பத்திகள் பிரிவின் பாரியளவிலான பிரிவில் வெள்ளிப் பதக்க விருதை வென்றுள்ளது. அதற்கு மேலதிகமாக உரிய ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்க நெறிகளுக்கமைய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஏற்றுமதியாளர் என்ற வகையில் Farmchemie நிறுவனம் Certificate of Ethinical Trading சான்றிதழும் இந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

# ஏற்றுமதியில் முன்னோடியான DSI Tyresஇற்கு NCE உயர் விருது



இலங்கையின் ஏற்றுமதித் துறையில் முதன்மையானதும் புகழ்மிக்கதுமான நிறுவனமாக பல தசாப்தங்களாக உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ள ரயர் உலகின் புரட்சிகர முதல்வனான DSI Tyres தேசிய ஏற்றுமதிச் சபை (NCE) ஏற்பாடுசெய்த ஏற்றுமதி உயர் விருது – 2022 விருது விழாவில் பாரியளவிலான பிரிவின் இறப்பர் ரயர் மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பிரிவில் வெள்ளிப் பதக்க விருதை வென்றுள்ளது. கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் DSI Tyres நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ஷ மேற்படி வெள்ளிப் பதக்க விருதை பெற்றுக்கொண்டார்.

# 2ஆவது காலாண்டில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற JAT நிறுவனம்



நிஷால் பெர்டினாண்டோ - பிரதம நிறைவேற்று அதிகாரி, நிர்வாகப் பணிப்பாளர் - JAT ஹோல்டிங்ஸ் பிஎல்சி

- வருமானம் 40% ஆல் உயர்வு (இதுவரையான ஆண்டில்)
- வரிக்குப் பிந்தைய இலாபம் 50% ஆல் அதிகரிப்பு (இதுவரையான ஆண்டில்)
- WHITE by JAT இன் வருமானம் 840%ஆல் விரிவடைவு
- பங்களாதேஷ் சந்தையில் உற்பத்தி செய்வதற்கும் வழங்கலை மேற்கொள்வதற்கும் முழுமையாக உரிமையாண்மையின் கீழான துணை நிறுவனம் கூட்டிணைப்பு
- அதிநவீன உபகரணங்களுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தின் மேம்பாட்டுப் பணிகள் பூர்த்தி



ஈலியன் குணவர்தன - ஸ்தாபகர், முகாமைத்துவப் பணிப்பாளர் - JAT ஹோல்டிங்ஸ் பிஎல்சி

மரப்பூச்சுகள் துறையில் இலங்கையில் சந்தை முன்னிலை வகிப்பதுடன், பல்தேசிய கூட்டு நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்ற JAT ஹோல்டிங்ஸ் பிஎல்சி, மென்மேலும் வளர்ச்சிகண்டு வருகின்ற நிலையில், 2022/23 நிதியாண்டின் 2ஆவது காலாண்டில் மிகவும் சிறப்பான நிதியியல் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளது. இக்காலாண்டில், குழுமம் தனது முக்கியமான ஆரம்ப பொதுப் பங்கு வழங்கல் நடவடிக்கையின் வாக்குறுதியை நிறைவேற்றி, பங்களாதேஷில் அதன் சொந்த, முழுமையான செயற்பாடுகளைக்கொண்ட நவீன உற்பத்தி ஆலையை ஆரம்பித்து, ஒரு முக்கிய சாதனை இலக்கை எட்டியுள்ளது. அதேநேரத்தில், JAT ஹோல்டிங்ஸ் பிஎல்சி, தனது வரலாற்றிலேயே 2ஆவது காலாண்டில் மிக உயர்ந்த வருமானத்தைப் பதிவுசெய்துள்ளதுடன், முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது, வரிக்கு முந்தைய இலாபத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. அதன்படி, JAT ஹோல்டிங்ஸ் பிஎல்சி இந்த காலகட்டத்தில் இதுவரையான ஆண்டில் 40% வருமான வளர்ச்சியைப் பதிவாக்கியுள்ளதுடன், அதேநேரத்தில் அதன் வரலாற்றில் மிகவும் சவாலான பொருளாதார சூழலுக்கு மத்தியில் மொத்த இலாப மட்டங்களை அதிகரிக்கவும் செய்துள்ளது. குழுமத்தின் மூலோபாய மற்றும் நிதியியல் பலத்தை இது தெளிவாக வெளிப்படுத்துகிறது.

# 'பெண்களுக்கு பணிக்கான சிறந்த இடம்' மற்றும் 'மகளிர் நட்பு பணியிடம்' விருதுகள் வென்ற AIA






AIA இன்சூரன்ஸ் இலங்கையில் Great Place to Work இல் உள்ள சுயாதீன ஆய்வாளர்களால் தொடர்ச்சியாக 5 வருடங்களாக பெண்களுக்கு பணிக்கான சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டதில் பெருமிதம் கொள்கிறது. இது பெண்கள், தங்கள் தொழில் மற்றும் வாழ்வில் செழிக்க அதிக உள்வாங்கல், மேம்பாடு மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பெண்களுக்கான பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதில் AIA மேற்கொண்ட முயற்சிகளுக்காக மற்றொரு விருது வழங்கும் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது. நிறுவனம் 2022ஆம் ஆண்டில் Satynmag.com மற்றும் CIMA ஸ்ரீலங்காவால் மீண்டும் ஒருமுறை 'மிகச் சிறந்த மகளிர் நட்பு பணியிடங்களில்' ஒன்றாக பெயரிடப்பட்டது. இந்த தனித்துவமான விருது, பணியிடத்தில் பெண்களை ஊக்குவிக்கவும், அதிகாரம் அளிக்கவும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

இந்த விருதுகள் குறித்து AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சத்துரி முனவீர கருத்துத் தெரிவிக்கையில், "எங்கள் பணியாளர்கள் அனைவருக்கும் உண்மையிலேயே பாதுகாப்பான மற்றும் வெகுமதி அளிக்கும் பணியிடமாக இருப்பதற்கு நிலையான அங்கீகாரங்களைப் பெறுவதில் நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். AIAஇல் பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் ஆதரவளிக்கும் அர்த்தமுள்ள கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல தசாப்தங்களாக பணியிடத்தில் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை வளர்த்து வருகிறோம். இன்றைய சமுதாயத்தில் பெண்கள் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை ஆதரிப்பதற்காக பல சவால்களை ஏற்று பல பாத்திரங்களை வகிக்கின்றனர். இருப்பினும், பெரும்பாலான பெண்கள் தங்கள் தொழிலின் பொறுப்புகளை பாரம்பரிய பாலின பாத்திரங்கள் மற்றும் வீட்டில் அவர்களுக்குத் தேவையான பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்துவது சவாலாக உள்ளது. AIA எப்போதும் இந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து, சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் பணிச்சூழலை உருவாக்குவதை உறுதிசெய்துள்ளது – எனக் குறிப்பிட்டார்.

# இலங்கை காலநிலை நிதியத்திடமிருந்து கார்பன் அடிச்சுவடு உறுதிப்படுத்தலைப் பெற்றுள்ள Nestle Lanka



நெஸ்லே லங்கா தனது குருநாகல் தொழிற்சாலையின் மூலப்பொருள் கையகப்படுத்தல் முதல் வரவேற்பு கருமபீடம் வரை தேங்காய் மதிப்பு சங்கிலி பகுப்பாய்வை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன், இலங்கை காலநிலை நிதியத்திடமிருந்து காபன் அடிச்சுவடு சரிபார்ப்பு உறுதிப்படுத்தலைப் பெற்று, அதன் மூலமாக மேல்நிலை தேங்காய் மதிப்புச் சங்கிலிக்கான சரிபார்ப்பு உறுதிப்படுத்தலை நிறைவுசெய்த இலங்கையிலுள்ள முதல் நிறுவனமாகத் திகழ்கிறது. இப்பகுப்பாய்வின் பரிந்துரைகள், 2050ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான அதன் பயணத்தில், நிறுவனத்தின் தேங்காய் மதிப்புச் சங்கிலியில் உமிழ்வை நடுநிலையாக்குவதற்கும், மீளுருவாக்க விவசாய நடைமுறைகளை நோக்கிச் செல்வதற்கும் ஒரு விரிவான வேலைத்திட்டத்தை வகுக்க வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படும்.

இலங்கை காலநிலை நிதியம் போன்ற மதிப்பிற்குரிய நிறுவனத்திடமிருந்து கார்பன் அடிச்சுவட்டு சரிபார்ப்பு உறுதிப்படுத்தலைப் பெற்றிருப்பது ஒரு பெரும் பாக்கியம் என்பதுடன், இது பூமிக்கு நல்லது செய்வதில் எங்களின் ஓயாத அர்ப்பணிப்புக்கு சான்றாக உள்ளது. தேங்காய் எங்களின் முக்கிய சேர்க்கைப் பொருட்களில் ஒன்றாக இருப்பதால், இந்த சரிபார்ப்பு உறுதிப்படுத்தல், எங்கள் நிகர பூஜ்ஜிய பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை இலக்காகும். இது எங்கள் தேங்காய் மதிப்பு சங்கிலியில் உமிழ்வை மேலும் குறைக்க உதவுகிறது. நாம் வணிகத்தை முன்னெடுக்கின்ற விதத்தில் நிலைபேற்றியல் என்பது உட்பொதிந்துள்ளது. நல்லுணவு, நல்வாழ்வு என்ற எங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற, பண்ணை முதல் உணவு மேசை வரை, எங்களுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருடனும் சேர்ந்து, நிகர பூஜ்ஜியத்தை நோக்கிய முயற்சிகளை துரிதப்படுத்துகிறோம். இந்த நோக்கத்திற்காக நாங்கள் எமது ஏனைய மதிப்புச் சங்கிலிகளுக்கும் இதேபோன்ற பகுப்பாய்வுகளை நடத்துவோம் – என்று நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஜேசன் அவன்சென்யா தெரிவித்தார்.

நாட்டில் தேங்காய்ப்பால் மாவை அதிகளவில் ஏற்றுமதிசெய்யும் பாரிய நிறுவனங்களில் ஒன்றாக, நெஸ்லே லங்கா இலங்கையின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களித்து வருவதுடன், உள்நாட்டு தேங்காய் தொழில்துறையை மேம்படுத்த உதவி, விவசாய சமூகங்களுக்கு நிலைபேற்றியல்கொண்ட வாழ்வாதாரத்தை தோற்றுவிக்கிறது. 1986ஆம் ஆண்டு மெகி அசல் தேங்காய்ப்பால் மா அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, நிறுவனம் 8,000இற்கும் மேற்பட்ட உள்நாட்டு தேங்காய் செய்கையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியுள்ளது. உலகளவில் 50இற்கும் மேற்பட்ட நாடுகளில் விற்கப்படுகின்ற மெகி அசல் தேங்காய்ப்பால் மாவை உற்பத்தி செய்வதற்காக, 2021ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 94 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களை கொள்முதல் செய்து, ரூபா 6 பில்லியன் தொகையை உள்நாட்டு தேங்காய் தொழில்துறைக்கு பங்களிப்புச் செய்து, அவற்றின் ஏற்றுமதி மூலமாக அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் பங்களித்துள்ளது.

நாட்டின் ஏற்றுமதித் துறையில் நெஸ்லே லங்காவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட 24ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில், 2019/2020 மற்றும் 2020/2021 நிதியாண்டுகளுக்கான தேங்காய் விதைகள் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதை நிறுவனம் பெற்றது.

தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல் என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. 25,000இற்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800இற்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது.

கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில் இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90%க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilanbusiness@gmail.com

## CRM மற்றும் ATM பணம் மீளப்பெறுகைக்கு Digital பற்றுச்சீட்டை அறிமுகம் செய்யும் கொமர்ஷல் வங்கி



ATM இயந்திர செயற்பாடுகளுக்கு டிஜிட்டல் பற்றுச்சீட்டு முறையை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. மற்றொரு பசுமை வங்கி செயற்பாடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த முறையானது சுற்றாடலுக்கு இசைவானது மட்டுமன்றி, வாடிக்கையாளர் வசதிகளை மேம்படுத்தி, கட்டணங்களைக் குறைத்து கடதாசி வீண்விரயத்தையும் தடுக்கின்றது.

வங்கியின் கிரடிட் அல்லது டெபிட் கார்ட் வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் உள்ள வங்கியின் பரவலான பண மீள் சுழற்சி (CRMs) அல்லது தன்னியக்க இயந்திரங்களை (ATMs) பணத்தை மீளப் பெறுவதற்காக பாவிக்கின்றபோது அவர்களுக்கு அச்சிடப்பட்ட காகித பற்றுச்சீட்டுக்குப் பதிலாக டிஜிட்டல் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்படும். வங்கியுடன் வாடிக்கையாளர் பதிவு செய்துள்ள கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) மூலமாக இந்தப் பற்றுச்சீட்டு அனுப்பப்படும்.


இந்த SMSஇல் பற்றுச்சீட்டைப் பார்வையிடக்கூடிய ஓர் இணைப்பு அனுப்பி வைக்கப்படும். இதை ஒரு கம்பியூட்டரிலோ அல்லது கையடக்கத் தொலைபேசியிலோ பதிவிறக்கம் செய்து பார்வையிடலாம். எதிர்கால மீட்டலுக்காக PDF வடிவில் இது அமைந்திருக்கும்.

CRM மற்றும் ATM செயற்பாடுகளுக்கான கடதாசி மூலமான பற்றுச்சீட்டுக்காக அறவிடப்பட்ட ஐந்து ரூபா கட்டணத்திலிருந்து இதற்கு விலக்களிக்கப்படும்.

## இலங்கையில் வேகமாக வளர்ந்துவரும் காப்புறுதி நிறுவனமாக அமானா தகாபுல்



ராஜித ஒபேசேகர - தலைவர், காப்பரேட் ஸ்ரட்டர்ஜி 2



ஷெஹான் பைசல்

2021ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக 7ஆவது காலாண்டாக இலங்கையில் மிக வேகமாக வளர்ந்துவரும் காப்புறுதி நிறுவனமாக அமானா தகாபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி தனது அந்தஸ்தையும், ஸ்தானத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. நிறுவனம் தனது 2022, 3ஆவது காலாண்டின் நிதியியல் பெறுபேறுகளை சமீபத்தில் பொது வெளியில் வெளியிட்டபோது இது வெளிப்பட்டுள்ளது. அமானா தகாபுல் இன்சூரன்ஸ் பிஎல்சி 2022ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டில் 46% வருமான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன், அதன் வருமானம் ரூபா 2.547 பில்லியனாக உயர்ந்துள்ளது. வருமானத்தின் வளர்ச்சி, மோட்டார் அல்லாத மற்றும் மோட்டார் காப்புறுதிப் பிரிவுகளின் வளர்ச்சியுடன், தொழில்துறை சராசரியை விடவும் கணிசமான அளவில் அதிகமாக இருந்தது.

3ஆவது காலாண்டைப் பொறுத்தவரையில், அண்மைக்காலங்களில் எட்டப்பட்ட வளர்ச்சியை பகுப்பாய்வுசெய்து ஒப்பிடுகையில், அமானா தகாபுல் இன்சூரன்ஸ் பிஎல்சியின் வேகமான வளர்ச்சியை இக்காலாண்டு நிரூபிக்கிறது. 2020ஐ விட 2021இன் 3ஆவது காலாண்டின் வளர்ச்சி 26 வீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது, அதே நேரத்தில் 2022இன் 3ஆவது காலாண்டு 2021ஐ விட 46 வீதமாக அதிகரித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குள் நிறுவனம் 72% ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைய முடிந்துள்ளது என்பதை இது நிரூபிப்பதுடன், இது ஓர் அபரிமிதமான சாதனையாகும்.

## TATA வணிக வாகன உரிமையாளர்களுக்காக மெகா பிரசாரத்தை ஆரம்பித்துள்ள DIMO - TATA






இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகை துறைசார்ந்த கூட்டு நிறுவனமான DIMO நிறுவனம், TATA Motors உடன் இணைந்து, 'DIMO – TATA Mega Campaign' (DIMO – TATA மெகா பிரசாரத்தை) 2023 ஜனவரி 09 முதல் 21 வரை 16 DIMO – TATA சேவை மையங்கள் மற்றும் நாடு முழுவதும் நிறுவப்பட்ட 32 இடங்களிலும் முன்னெடுக்கிறது. இந்த பிரசாரத் திட்டமானது, அனைத்து TATA வர்த்தக வாகன வாடிக்கையாளர்களுக்கும், தங்களது வாகனம் குறைந்தபட்ச செயலிழப்புகள் மற்றும் பராமரிப்பு செலவுக்குட்பட்டதாக இயங்குவதை உறுதிசெய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இதன் விளைவாக வாடிக்கையாளர்களின் தினசரி செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதோடு, குறிப்பாக, வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ள தற்போதைய சூழலில், மிகவும் அவசியமானதாகக் காணப்படும் வாகனங்களின் நீண்ட ஆயுட்காலத்தைப் பேணுவதற்கும் வழிவகை செய்கின்றது.

இதன்மூலம் எஞ்சின், கியர்பொக்ஸ், டிபெரென்ஷியல், ப்ரொப்பல்லர் ஷாப்ட், கிளட்ச், சஸ்பென்ஷன், ஸ்டீயரிங், பிரேக், ஹைட்ரோலிக்ஸ், எலக்ட்ரிக்கல்ஸ், எரிபொருள் தொகுதி உள்ளிட்ட 80 விடயங்கள் தொடர்பான முழுமையான ஆய்வு போன்ற பல்வேறு நன்மைகளை வாடிக்கையாளர்கள் பெறுவார்கள். வாகனத்தை சிறந்த முறையில் பராமரிக்க என்னென்ன பழுதுபார்த்தல் விடயங்கள் மற்றும் சேவைகள் தேவை என்பது பற்றிய ஆலோசனையுடன், ஒவ்வொரு ஆய்வு பற்றிய விரிவான அறிக்கைகளையும் இதில் பெற முடியும். இது தவிர, இந்த பிரசாரத் திட்டத்தின் மூலம் இணையும் வாடிக்கையாளர்கள், உதிரிப்பாகங்களுக்கு 50% வரை தள்ளுபடி வவுச்சர்களைப் பெறலாம். இவை 2023, மார்ச் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன், குறித்த காலப்பகுதியில் இதனை பல முறை பயன்படுத்தலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரசாரத் திட்டத்தின்போது, வாடிக்கையாளர்கள் DIMO – TATA பணிமனைகளால் வழங்கப்படும் சேவை மற்றும் பழுதுபார்ப்பு பொதிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதில், லுப்ரிகேஷன் சேவைகள், கிளட்ச் ரிப்பயர், பிரேக் பேட் மாற்றுதல், டைமிங் பெல்ட், ஹப் கிரீசிங், எஞ்சின் ரிப்பயர் உள்ளிட்ட பெரும்பாலான TATA வர்த்தக வாகன மாதிரிகளுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த சேவை பொதிகள் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பு கூடிய சேவையை வழங்குவதோடு, இவை ஏனைய பழுதுபார்ப்பு மையங்களால் ஈடுசெய்ய முடியாத வகையிலான மிகவும் கட்டுப்படியான விலையிலும் குறுகிய காலத்திற்குள்ளும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில், வாடிக்கையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட DIMO – TATA தரக்குறியீட்டுடன் கூடிய ரீ-சேர்ட்டுகள் வழங்கப்படுவதோடு, இலவச ஒயில் மீள்நிரப்பல்கள் உள்ளிட்ட விடயங்களும் கிடைக்கின்றன.

DIMO நிறுவனத்தின் விற்பனைக்குப் பின்னரான சேவையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி மஹேஷ் கருணாரத்ன இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "2023ஆம் ஆண்டில் வாகன பராமரிப்பிற்கான சரியான ஆரம்பத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக நாடு தழுவிய DIMO – TATA மெகா பிரசாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வாடிக்கையாளர்கள் உரிய நேரத்திற்குள், மலிவான சேவைகளைப் பெறுகிறார்கள். வாகன உரிமையாளர்களுக்கான சரியான வளர்ச்சிப் பங்காளியாக DIMO திகழ்வதே இந்த பிரசாரத்திற்கான காரணம் என்பதோடு, வாகனத் துறையிலுள்ள அனைத்து பங்குதாரர்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிக்கும் எமது நோக்கத்தையும் இது உள்ளடக்கியுள்ளது" – என்றார்.

## வட்ஸ்அப் வழியாக 24 மணிநேரமும் சேவைகளை வழங்கிவரும் DFCC Chatz




DFCC வங்கியானது புத்தாக்கமான மற்றும் முன்னோடி டிஜிட்டல் வங்கிச்சேவை தொழில்நுட்பத்தின் பக்கபலத்துடன் பரந்த அளவிலான பரிவர்த்தனை, சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கும் முழுமையான ஒரு வணிக வங்கியாகும். வேகமாக நகரும் இன்றைய உலகில் சௌகரியமே மிகவும் முக்கியமானது என்பதையும், 24 மணிநேரமும் உடனடி வாடிக்கையாளர் சேவை உதவி அவசியம் என்பதையும் புரிந்துகொண்டு, DFCC வங்கி வட்ஸ்அப்இல் DFCC Chatz சேவையை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

DFCC Chatz என்பது DFCC வங்கியுடன் இணைந்து, சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் சௌகரியமான, விரைவான மற்றும் சிரமமில்லாத ஒரு வழியாகும். வாடிக்கையாளர்கள் தற்போது எங்கேயும், எப்போதும் உடனடி வாடிக்கையாளர் சேவை உதவியைப் பெற வட்ஸ்அப்ஜப் பயன்படுத்தலாம்.

## Sew Desatama Dialog ஊடாக மடொல்சிம பகுதியில் புதிய தொடர்பு இயக்கக் கோபுரம்



இலங்கையின் முதற்தர வலையமைப்பான Dialog Axiata PLC, நாட்டின் கிராமங்கள் மற்றும் நாட்டுப்புறங்கள் முழுவதிலும் இணைப்பை அதிகரிப்பதற்கான உறுதிமொழியின் ஒரு பகுதியாக Sew Desatama Dialog முன்முயற்சியின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள மடோல்சிமா கிராமத்தில் ஒரு தொலைத்தொடர்பு கோபுரத்தை அண்மையில் நிறுவியது.

பதுளை மாவட்டத்தின் நிக்கப்பிட்டிய மற்றும் கரந்தகம கிராமங்களிலுள்ள கோபுரங்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்தின் பனிரெந்தவ, பஹாரிய, கும்புக்க வாவி, மற்றும் மெதகம ஆகிய கிராமங்களிலுள்ள கோபுரங்களுடன் சேர்த்து மடோல்சிம கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் மேம்படுத்தப்பட்ட இணைப்பை வழங்கி அதன்மூலம் மக்களின் வாழ்வை வளப்படுத்தி வலுவூட்டுவதற்கு Dialog காட்டும் முனைப்பை இந்த முன்னெடுப்பானது மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

2022 நிறைவுடன் Dialog நிறுவனமானது 4700 மொபைல் 4G தளங்களை தனது வலையமைப்பின் மூலம் அடையப் பெற்றுள்ளது. நாட்டிலேயே அதிகப்படியான கோபுரங்களை உடைய வலையமைப்பாக மாறியுள்ளது. Green field கோபுரங்களைப் பயன்படுத்தி, உள்ளார்ந்த கிராமப்புற சமூகங்களுக்கு தன் பரவெல்லையை விரைவாக விரிவுபடுத்தியுள்ளதுடன், அடர்த்தியான பகுதிகளில் அவசரத் திறன் தேவைகளைப் பூர்த்திசெய்யயும் பொருட்டு Lamp Pole தீர்வுகளையும் வழங்கியுள்ளதன் மூலம் 95% 4G டேட்டா பரவெல்லையை பயன்படுத்தும் மக்கள்தொகையை Dialog தன்னகப்படுத்தியுள்ளது.

## SLT-MOBITELஇன் வருடாந்த நிதி அறிக்கை 2021இற்கு பெருமைக்குரிய SAFA விருது




ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சியின் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கைக்கு பெருமைக்குரிய தெற்காசிய கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) விருதுகள் வழங்கும் நிகழ்வில், தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டில் சிறந்த வெளிப்படுத்தல்களைக் கொண்ட வருடாந்த நிதி அறிக்கைகள், ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையிடல் மற்றும் கூட்டாண்மை வெளிப்படுத்தல்களுக்கான SAARC வருடபூர்த்தி விருதுகள் போன்றவற்றுக்காக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேபாளத்தின் காத்மண்டு நகரில் இடம்பெற்ற இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில், "தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை" என்பதில் தங்க விருதை ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சியின் வருடாந்த நிதி அறிக்கை பெற்றுக்கொண்டது. சர்வதேச வரி விதிப்பு மற்றும் டிஜிட்டல் நாணயம் 2022 என்பதன் அங்கமாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாராச்சி, நிதியியல் கணக்கீடுகள் மற்றும் வரிக் கையாளல்கள் பொது முகாமையாளர் இந்திரஜித் பிரியந்த ஆகியோர் SLT-MOBITEL சார்பாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

'No Dream too Big' எனும் தொனிப்பொருளுக்கமைய SLT-MOBITELஇன் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்பப் புரட்சியை ஊக்குவிப்பது தொடர்பில் நிறுவனத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்புக்கு தூண்டுகோளாகவும் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

SAFA விருதை வெற்றியீட்டி இருந்தமையானது, SLT-MOBITELஇன் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கை கடந்த ஆண்டு முழுவதிலும் பெற்றுக்கொண்ட கௌரவிப்புகளுக்கு மேலும் அர்த்தம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

## வெண்கல விருதை வென்ற SMR Consolidated




சமையல் எண்ணெய் மற்றும் கொழுப்பு வகைகளின் இலங்கையின் முதன்மையான உற்பத்தியாளர், சுத்திகரிப்பாளர் மற்றும் ஏற்றுமதியாளராகத் திகழ்ந்துவருகின்ற SMR Consolidated (Sena Mills and Refineries Pvt Ltd.) நிறுவனம், தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனத்தின் 30ஆவது வருடாந்த ஏற்றுமதி விருதுகள் 2022இல், அதன் தரம் மற்றும் சிறப்புக்கான அர்ப்பணிப்புக்காக வெண்கல விருது அங்கீகாரத்தை வென்றுள்ளது. இந்த விருது டிசம்பர் 2ஆம் திகதியன்று Shangri-La ஹோட்டலில் நடைபெற்ற தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளன வருடாந்த ஏற்றுமதி விருது விழா – 2022இல் SMR Consolidated நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன், SMR Consolidated நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அமல் இந்திரஜித் இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

# அதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக வெளிப்படையான முறையில் நலன்புரி பயனாளிகள் பட்டியலை தயாரிக்க முடியாத நிலைமை

## அரசாங்க நிதி பற்றிய குழுவில் வெளிப்பட்ட தகவல்






21 மற்றும் 22 பிரிவுகளின் கீழ் பிழையான தகவல்களை வழங்கினால் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்க முடியும்

சர்வதேச நாணய நிதியம் முன்மொழிவு செய்திருப்பதால் இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதன் அவசியத்தைக் குழு வலியுறுத்தியது

சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கும்போது வெளிப்படைத்தன்மையுடன் அதன் பயனாளிகளை அடையாளம் காண்பதற்கான பட்டியலைத் தயாரிப்பதற்கான தகவல்களை சேகரிப்பதற்கான பணியை சமுர்த்தி அதிகாரிகள் நிராகரித்திருப்பதன் ஊடாக சிக்கல் நிலைமை ஏற்பட்டிருப்பதாக அண்மையில் (10) நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது.

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் 2302/23ஆம் இலக்க வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அனுமதிப்பதற்காக அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் கூடியபோதே இந்த விடயம் புலப்பட்டது.

சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரி கொடுப்பனவுகளைச் செலுத்தும்போது ஊழலின்றி வெளிப்படைத்தன்மையுடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவு என்றும், இதற்கான பொறுப்பு நலன்புரி நன்மைகள் சபைக்கு உள்ளதாகவும் இங்கு மேலும் தெரியவந்தது. இதற்கமைய இந்தத் தகவல்களைச் சேகரிக்கும் பணிக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஒழுங்குவிதி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி.விஜேரத்ன குறிப்பிடுகையில், பதிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரிகளால் வழங்கப்பட்ட விபரங்களுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்போது சட்டத்தின் 21 மற்றும் 22ஆவது பிரிவுகளுக்கமைய தனது வேலையை இழக்கவேண்டிய நிலை இருப்பதாகவும், இந்தப் பிரிவைத் திருத்தும் வரையில் இது தொடர்பான களப்பணிகளிலிருந்து விலகுவதாக சமுர்த்தி, கிராமசேவகர், பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

இந்த 21ஆம் 22ஆம் பிரிவுகளின் ஊடாக பிழையான தகவல்கள் உள்ளீடுசெய்யும் அதிகாரிகள் தண்டனைக்கு உட்படுவார்கள் என்றும், இந்தப் பிரிவு திருத்தப்படும்வரை இந்தத் தகவல்களை சேகரிப்பதை நிராகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கிய குழு, நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் இது தொடர்பில் அவசரமாக கலந்துரையாடி ஒரு தீர்வை எட்டுமாறும் குழு அறிவுறுத்தியது. இந்த தரவு சேகரிப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வது தொடர்பான முடிவுகளை மாற்று நடவடிக்கையை பின்பற்றி எடுக்குமாறும் குழு பரிந்துரைத்துள்ளது.

அரசாங்க நலன்களைப் பெறுவதற்கான பயனாளிகள்/அதற்குத் தகுதியான குடும்பங்களை ஆரம்ப விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன், நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்குச் சென்று இரண்டாம் நிலைத் தகவல்களை சேகரிக்க கையடக்கத்தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகளில் 40 வீதம் தகுதியற்றவர்கள் என உலக வங்கியின் கணக்கெடுப்பில் வெளிப்பட்டிருப்பதாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய தகுதியில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கி, அதில் ஒரு சதவீதத்தைத் தமக்காக பெற்றுக்கொள்ளும் ஊழல் அதிகாரிகள் இருப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, இந்த நலன்புரித் திட்டத்தை உரிய வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதற்கு சரியான தரவுகளைக்கொண்ட ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதன் அவசியம் குறித்து குழுவில் வலியுறுத்தப்பட்டது.

நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்கும்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்துவது அவசியம் என்றும் குழு பரிந்துரைத்தது. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருக்கும் பின்னணியில் தேசிய அடையாள அட்டையை சகல குடிமக்களுக்கும் பெற்றுக்கொடுக்க முடியாது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்றும், மோசடிகளைத் தடுப்பதற்கு இது முக்கியமான முடிவாக இருக்கும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

எனவே, இந்த ஆவணத்தைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில் தாமதம் ஏற்படலாம் என்பதால், ஊழல் மற்றும் மோசடி இல்லாத கலாசாரத்தை உருவாக்க இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்கவேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது.

இதன்படி, இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கிய குழு, நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் ஆகியோர் இது தொடர்பில் அவசரமாக கலந்துரையாடி தீர்வொன்றை எட்டுமாறும் குழு அறிவுறுத்தியது.


மேலும், இவ்விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இரண்டு வாரங்களுக்குள் குழுவுக்கு அறிவிக்குமாறும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் (கலாநிதி) சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, சஹான் பிரதீப் விதான மற்றும் மதுர விதானகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**எச்.ஈ. ஜனகாந்த சில்வா,**
**பணிப்பாளர் சட்டவாக்க சேவைகள் /**
**பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்)**
**இலங்கை நாடாளுமன்றம்.**

# போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தால் கைதுசெய்யப்பட்டவர் உயிரிழந்த சம்பவம்

## மருதானை பொலிஸார் மேலதிக விசாரணை



பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் முகாமைத்துவ உதவியாளரான சமந்த ப்ரீத்தி குமார தனது நண்பருடன் நாரஹேன்பிட்டி அலுவலகத்திற்கு அருகிலுள்ள உணவகமொன்றுக்கு பகல் உணவைப் பெற்றுக்கொள்வதற்காக சென்றிருந்தார்.

தனது நண்பர் குறித்த உணவகத்திலேயே பகல் உணவை எடுத்துக்கொண்ட நிலையில், சமந்த ப்ரீத்தி குமார கொள்வனவு செய்த உணவுப்பொதியுடன் தனியாக அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

இதன்போது, அங்கு ஜீப்பில் வந்த சிலர் ப்ரீத்தி குமாரவை அழைத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவுவரை அவர் நாரஹேன்பிட்டியிலுள்ள தனது தங்குமிடத்திற்கு வராத நிலையில், தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அதிபர் உறவினர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் வினவியபோது, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் வலையமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கிடையே அந்த வலையமைப்பின் முக்கியஸ்தர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சமந்த ப்ரீத்தி குமார கைதுசெய்யப் பட்டதாக அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரிடம் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பின் உயர்மட்ட உறுப்பினர்கள் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் விசாரணை நடத்தியபோது, அவர் போத்தலை இரண்டாக உடைத்து அங்கிருந்த பொலிஸாரை தாக்கியதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்போது, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகநபரின் கால்களைத் தாக்கியதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்தத் தாக்குதலின்போது சந்தேகநபர் மயக்கமடைந்து கீழே வீழ்ந்ததாக தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர், அவர் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாகக் குறிப்பிட்டார்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு பிள்ளையின் தந்தையான 41 வயதான சமந்த ப்ரீத்தி குமார, மீட்டியாகொட தெல்வத்த பகுதியை சேர்ந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சிறை அனுபவங்களை புத்தகமாக எழுதும் தொழிலதிபர் பிரியமாலி




விளக்கமறியல் கால சிறை அனுபவங்களை புத்தகமாக எழுதி வருகிறேன் என தொழிலதிபர் திலினி பிரியமாலி தெரிவித்தார்.

''நான் விளக்கமறியல் சிறை கால எனது அனுபவத்தை புத்தகமாக எழுதுகிறேன்'' என நேற்றுமுன்தினம் கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்திலிருந்து வெளியேறும்போது பிரியமாலி தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதம் சிஐடியால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், டிசம்பர் 16 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கின் சந்தேகநபர்களான திலினி பிரியமாலி உள்ளிட்ட மூவர் நேற்றுமுன்தினம் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

# வர்த்தக சமூகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டின் வர்த்தக சமூகத்தைப் பாதுகாக்கும் வகையில் கடனை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதன் மூலம் வர்த்தகர்களுக்கு அவசியமான சலுகைகளைப் பெற்றக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தான் மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் பெண் தொழில் முனைவோரை கௌரவப்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் (11) மாலை கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற "பிரதிபா அபிஷேக 2022" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாகாண, தேசிய, சார்க் பிராந்தியம் மற்றும் சிறப்பு ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. இதன்போது தேசிய மட்டத்துக்கான விருதுகளையும் சிறப்பு விருதுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி கௌரவித்தார்.

நாடு என்ற வகையில் மிகவும் நெருக்கடியான சூழலை நாம் எதிர்கொண்டுள்ளபோதும் அந்த சவால்களை முறியடித்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் எமக்கு இவ்வருடத்தில் கிடைத்திருக்கின்றது என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அதற்கு மேலதிகமாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து கடனுதவி கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலாப நோக்கற்ற அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும், நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நிலையான பொருளாதாரத்தில் புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கி உலகத்துடன் போட்டியிடக் கூடியதான அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்து தரப்பினரதும் அர்ப்பணிப்பின் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க, நேபாளத் தூதுவர் பஷு தேவ் மிஸ்ரா, பிரித்தானிய பதில் உயர்ஸ்தானிகர் லீசா வென்ஸ்டோல் மற்றும் மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் தலைவி அனோஜி டி சில்வா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துக் கேட்காமல் ஏனைய கட்சிகளுடன் கூட்டாக போட்டியிட வேண்டும்

## தேர்தலின் வெற்றிக்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் அதுவே சிறப்பாக அமையும் என்கிறார் ஜனக்க பண்டார தென்னகோன் எம்.பி.

**(மாத்தளை நிருபர்)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் பிரதிநிதிபபடுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சி தனித்துக் கேட்பதை விட ஏனைய சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டாக போட்டியிடுவதே இத்தேர்தலில் வெற்றிக்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் சிறப்பாக அமையும் - என மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாக தம்புள்ளையிலுள்ள தனது இல்லத்தில் வைத்து ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள இக்கட்டான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒரு தேர்தலுக்கு முகங்கொடுப்பதென்பது நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்ட பொருளாதாத்தை மேலும் அதல பாதாள'த்திற்கு தள்ளுவதாகவே அமையும். என்றாலும் இலங்கையின் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு தற்பொழுது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சம்பந்தமாக விசேட அறிவித்தல்களை வெளியிட்டு தேர்தலுக்கான ஆக்கப்பூர்மான நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், ஓர் அரசியல் கட்சி என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும். எனவே, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதை விட கூட்டுக் கட்சிகளோடு இணைந்து போட்டியிடுவது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்கும் தேர்தல் வெற்றிகளுக்கும் வழிவகுக்கும்.

இத்தேர்தல் நடவடிக்கை சம்பந்தமாக மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளை மற்றும் தம்புள்ள மாநகர சபை உட்பட இம்மாவட்டத்தில் இருக்கும் பதினொரு உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் உறுப்பினர்களோடு கலந்தாலோசித்தபோது கடந்த காலங்களில் எமது கட்சி கீழ்மட்ட அரசியல் நிலைவரங்களை கருத்திற்கொள்ளாது செயல்பட்டதால் இந்த மக்கள் பிரதிநிதிகள் தற்போது விரக்தியடைந்த நிலையில் காணப்படுவதால் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் எமது கட்சி நிலைவரங்களை ஸ்திரப்படுத்திக்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

கட்சியின் தலைமைத்துவம் தன்னிச்சையாக செயல்படுவதை தவிர்த்துக்கொண்டு நாடளாவிய ரீதியில் இருக்கும் மாவட்ட அரசியல் தலைமைத்துவங்களுடன் கலந்தாலோசித்து நிரந்தர தீர்வுகளுக்கு வருவதன் மூலமே கட்சியின் கீழ்மட்ட அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். தலைநகர் கொழும்பில் இருந்துகொண்டு அல்லது கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இருந்துகொண்டு தன்னிச்சையாக எடுக்கும் தீர்வுகள் கட்சியின் வளர்ச்சிக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் பாதகமாகவே அமையும் என்பதை நான் எனது மாவட்டத்தில் உள்ளூராட்சி பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களில் நன்றாக புரிந்து கொண்டுள்ளேன் .

எனது மாவட்டத்தில் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளையும் ஆதரவாளர்களையும் பகைத்துக் கொண்டோ அல்லது ஓரங்கட்டிக்கொண்டோ அரசியலில் பயணிக்க முடியாது. இது எமது எதிர்கால அரசியலுக்கு மேலும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் எந்த நடவடிக்கைகளையும் நன்கு கலந்தாலோசித்து எடுக்கப்படும் முடிவுகளே சிறந்த முடிவைத் தரும். அடிமட்ட அரசியல் தளங்களை உதாசீனம் செய்து மேல் மட்டங்களில் எடுக்கப்படும் அரசியல் முடிவுகள் வெற்றிகரமாக அமைய மாட்டாது என்பதே அடியேனின் ஆணித்தரமான நம்பிக்கை - என்றார்.

# தேசிய மக்கள் சக்தி யாழில் கட்டுப்பணம் செலுத்தியது



தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று வியாழக்கிழமை செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

வலி. வடக்கு பிரதேச சபை, வலி. மேற்கு பிரதேச சபை, யாழ். மாநகர சபை, சாவகச்சேரி நகரசபை, காரைநகர் பிரதேச சபை உள்ளிட்ட ஐந்து சபைகளுக்கு இதன்போது தேசிய மக்கள் சக்தியால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

முதலாவது அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் தனது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மேலும் சில சுயேச்சைக் குழுக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சில பிரதேச சபைகளுக்காக இதுவரை கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

# ஹொக்கி உலகக்கிண்ணம் இந்தியாவில் இன்று ஆரம்பம்



(ரமணி)

உலகக்கிண்ண ஹொக்கி தொடர் இன்று முதல் எதிர்வரும் 29ஆம் திகதிவரை இந்தியாவில் நடைபெறவுள்ளது. 15ஆவது உலகக்கிண்ண ஹொக்கி தொடர் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா ஸ்டேடியம் மற்றும் ரூர்கேலாவின் பிர்சா முண்டா சர்வதேச ஹொக்கி ஸ்டேடியம் ஆகியவற்றில் நடைபெற இருக்கிறது.

உலகக்கிண்ண ஹொக்கி தொடரில் பங்கேற்க உலகம் முழுவதிலுமிருந்து 16 அணிகள் ஏற்கனவே தகுதி பெற்று 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் குரூப் 'ஏ' பிரிவில் அவுஸ்திரேலியா, ஆர்ஜென்ரீனா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. நடப்பு சாம்பியனான பெல்ஜியம், ஜேர்மனி, தென் கொரியா, ஜப்பான் ஆகிய அணிகள் குரூப் 'பி' பிரிவிலும், நெதர்லாந்து, நியூசிலாந்து, மலேசியா, சிலி ஆகிய அணிகள் குரூப் 'சி' பிரிவிலும் இடம்பெற்றுள்ளன. போட்டியை நடத்தும் இந்தியா, இங்கிலாந்து, ஸ்பெயின், வேல்ஸ் ஆகிய அணிகள் குரூப் 'டி' பிரிவில் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து அடுத்தடுத்து உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்தும் முதல் நாடு இந்தியாதான். இந்த முறைதான் போட்டி ஒரு நகரத்தில் மட்டும் நடத்தப்படாமல் இருக்கிறது. 1971ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு உலகக்கிண்ணப் போட்டி (HWC) தொடங்கியது. இந்த உலகக்கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. அப்போது 26 நாடுகள் பங்கேற்றன.



### அதிகமுறை சம்பியன் ஆன அணி

1971, 1978, 1982, 1994 ஆகிய ஆண்டுகளில் நான்கு முறை வெற்றி பெற்று அதிக HWC பட்டங்களை வென்ற சாதனையை பாகிஸ்தான் பெற்றுள்ளது. அதற்கு அடுத்தபடியாக நெதர்லாந்து உள்ளது. நெதர்லாந்து அணி 1973, 1990 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை வென்றுள்ளது.

### அதிக வெற்றி சதவீதம்

அவுஸ்திரேலியா தனது 92 போட்டிகளில் 69 போட்டிகளில் வெற்றி பெற்று, போட்டியில் சிறந்த வெற்றி சதவீதத்தை (75%) பெற்றுள்ளது. அடுத்து ஜெர்மனி, 61.7%, 47 போட்டிகளில் இருந்து 29 வெற்றிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது.

### அதிக போட்டிகளில் களமிறங்கிய அணி

அதிக எண்ணிக்கையிலான போட்டிகளை விளையாடியதில், நெதர்லாந்து 100 போட்டிகளுடன் முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து இந்தியா 95 போட்டிகளுடன் உள்ளது.

### அதிக கோல் அடித்த அணி

அவுஸ்திரேலியா இதுவரை 307 கோல்கள் அடித்துள்ளது. அந்த அணி ஒரு போட்டிக்கு 3.3 கோல்கள் என்ற விகிதத்தில் அதிக கோல்களை அடித்துள்ளது, அதற்கு அடுத்ததாக நெதர்லாந்து உள்ளது. நெதர்லாந்து அணி ஒரு போட்டிக்கு 2.67 என்ற விகிதத்தில் கோல் அடித்துள்ளது.

### அதிக கோல்களை சேவ் செய்த செய்த அணி

ஒரு ஆட்டத்திற்கு 1.16 என்ற விகிதத்தில் அவுஸ்திரேலியாதான் அதிக சேவ் செய்த அணிக்கான சாதனையைப் பெற்றுள்ளது.

### அதிக முறை உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடி அணி

இந்தியா, நெதர்லாந்து , ஸ்பெயின் ஆகிய அணிகள் மட்டுமே இதற்கு முன்னர் நடைபெற்ற 14 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் விளையாடியுள்ளன. அதே நேரத்தில் இந்த அணிகள் 15ஆவது உலகக் கிண்ணப் போட்டியிலும் விளையாடவுள்ளன. அர்ஜென்ரீனா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் 13 உலகக் கிண்ணப் போட்டித் தொடர்களில் களமிறங்கி அடுத்த இடத்தில் உள்ளன.

நான்கு முறை ஆண்கள் ஹொக்கி உலகக்கிண்ண சம்பியனான பாகிஸ்தான் அணி இந்தாண்டு தகுதி பெறவில்லை. இந்தோனேசியாவில் கடந்த 2022இல் நடந்த ஆண்கள் ஹொக்கி ஆசியக்கிண்ணப் போட்டியில் ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா , பாகிஸ்தான் ஆகிய அணிகள் குரூப் 'பி'யில் இடம்பெற்றன. பாகிஸ்தான் தனது முதல் போட்டியில் இந்தியாவை எதிர்கொண்டு டிரா செய்தது. பின்னர் 13-0 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் இந்தோனேசியாவை தோற்கடித்தாலும், ஜப்பானிடம் தோல்வியடைந்தது.

இந்திய அணி இந்தோனேசியாவை 16-0 என்ற கணக்கில் தோற்கடித்தது. இதனால் பாகிஸ்தான் 2022 ஆண்கள் ஹொக்கி ஆசிய கிண்ணப் போட்டியில் கோல் வித்தியாசம் காரணமாக வெளியேறியது. இதன் விளைவாகவே, பாகிஸ்தான் தனது வரலாற்றில் இரண்டாவது முறையாக ஆண்கள் உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதிபெறத் தவறியது.




# தனுஷ்கவின் வழக்கு அடுத்த மாதம் வரை ஒத்திவைப்பு



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான பாலியல் வல்லுறவு வழக்கை அடுத்த மாதம் 23ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக சிட்னி நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதியில் நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த தனுஷ்க குணதிலக்க சம்மதமின்றி தன்னுடன் பாலியல் உறவு கொண்டதாக அவுஸ்திரேலிய யுவதி ஒருவர் அளித்த முறைப்பாட்டையடுத்து, கடந்த நவம்பர் 6ஆம் திகதி அவுஸ்திரேலிய பொலிஸாரால் தனுஷ்க கைது செய்யப்பட்டார்.

அவருக்கு நவம்பர் 17ஆம் திகதி கடும் நிபந்தனைகளுடன் நீதிமன்றம் பிணை வழங்கியது. 200,000 அவுஸ்திரேலிய டொலர் பிணையில் தனுஷ்க குணதிலக்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான பாலியல் வல்லுறவு வழக்கை பெப்ரவரி 23 ஆம் திகதி வரை சிட்னி டோனிங் சென்ரர் நீதிவான் டேவிட் பீரிஸ் நேற்று ஒத்திவைத்தார்.

தனுஷ்க குணதிலக்க நேற்று நீதிமன்றில் ஆஜராகவில்லை. பெப்ரவரி 23ஆம் திகதி அவரின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜரானால், தனுஷ்க நீதிமன்றில் ஆஜராகத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தனுஷ்க குணதிலக்கவின் கடவுச்சீட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் டேட்டிங் செயலிகள் எதனையும் பயன்படுத் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இரவு 9 மணி முதல் காலை 6 மணிவரை வெளியில் செல்வதற்கும் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்த நியூசிலாந்து;
## தொடர் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் ஆட்டம் இன்று

பாகிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து அணி 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

கராச்சியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டிவான் கான்வே 101 ஓட்டங்களைக் குவித்தார். அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 85 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இதையடுத்து 262 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. பாபர் அசாம் 79 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். 43 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்த பாகிஸ்தான் அணி 182 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. கான்வே ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று வெள்ளிக்கிழமை இதே மைதானத்தில் நடைபெறுகின்றது.

# கணினி தொழில்நுட்பக் கோளாறு; அமெரிக்க விமான சேவைகள் முடக்கம்

## 5,400 விமானங்கள் தாமதம்; 900 விமானங்கள் இரத்து; மக்கள் பெரும் அவதி



அமெரிக்காவில், கணினியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாடு முழுவதும் விமான சேவைகள் நேற்று முடங்கின.

கணினியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானிகள் மற்றும் விமானங்கள் இயக்கம் தொடர்பான பணிகளில் உள்ளவர்களுக்கு தகவல் அளிக்கும் நோடம் (NOTAM) முறை செயலிழந்தது.

இதன் காரணமாக 5,400 விமானங்களைத் தாமதப்படுத்தவும் - தரையிறக்கவும் உத்தரவிடப்பட்டது. சுமார் உள்ளூர், வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் 900 விமானங்களை இரத்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உலகம் முழுவதுமுள்ள விமான நிலையங்களில் கட்டுப்பாட்டு அறைகள் செயற்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட விமான நிலையத்தின் எல்லையில், விமானத்தை இயக்கும் விமானி அதன் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பில் இருப்பார்.

அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் விமானக் கண்காட்சிகள், பெரசூட் சாகசம், லேசர் நிகழ்ச்சி, ரொக்கெட் சோதனை, போர்ப் பயிற்சி, உயரமான கட்டடங்களில் விளக்குகள் எரியாமலிருப்பது, எரிமலை வெடிப்பு, பறவைகள் நடமாட்டம், பட்டம் விடும் திருவிழா உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகள் குறித்தும் கட்டுப்பாட்டு நிலையங்கள் மூலம் விமானிகளுக்குத் தெரிவிக்கப்படும். இந்த பாதுகாப்பு நடைமுறை 'நோடம்' (NOTAM) என்றழைக்கப்படுகிறது. விமானிகளுக்குப் புரியும் வகையில் சில குறியீடுகள் மூலம் என்.ஓ.டி.ஏ.எம். அறிவிப்பு வழங்கப்படும்.

அமெரிக்க விமானப் போக்குவரத்துத்துறையின் 'நோடம்' தொழில்நுட்பத்தில் நேற்று கோளாறு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அமெரிக்க விமானப் போக்குவரத்து ஆணையம் வெளியிட்ட எச்சரிக்கை அறிவிப்பில், அமெரிக்கா முழுவதும் உள்நாட்டு, சர்வதேச விமானங்கள் உடனடியாகத் தரையிறங்குமாறு உத்தரவிடப்பட்டது.

தொழில்நுட்பக் கோளாறைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் வழக்கமான விமானப் போக்குவரத்து பல மணிநேரம் பாதிக்கப்பட்ட நிலையில், விமான சேவைகள் மீண்டும் படிப்படியாகத் தொடங்கின. இந்நிலையில், ஆகாயத்திலுள்ள அனைத்து விமானங்களையும் பாதுகாப்பாகத் தரையிறக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடனுக்கு விமானக் கட்டுப்பாடு கணினி அமைப்பின் செயலிழப்பு குறித்து போக்குவரத்துச் செயலர் விளக்கமளித்தார். இதன் காரணங்கள் குறித்து முழு விசாரணை நடத்த பைடன் உத்தரவிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் ஆலங்கட்டி மழை



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் புயல் மற்றும் மழை வெள்ளம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், அங்குள்ள சான் பிரான்சிஸ்கோ நகரில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது.

கலிபோர்னியாவில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து புயல் தாக்கி வருவதால், பல பகுதிகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சில பகுதிகளில் 76 செ.மீ. அளவுக்கு மழை பதிவாகியுள்ள நிலையில், மழை பாதிப்புகளில் சிக்கி இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய தேசிய பாரம்பரிய சின்னமாகும் இராமர் பாலம்?




இராமர் பாலத்தை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது குறித்து இந்திய மத்திய அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டுவருகிறது.

இராமர் பாலத்தை தேசிய பாரம்பரிய சின்னமாக அறிவிக்கக் கோரும் மனு மீது பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் பதிலளிப்பதாக உயர் நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு உறுதியளித்துள்ளது. அதன்படி, இராமர் பாலம் குறித்த வழக்கில் மத்திய அரசு பிராமணப் பத்திரம் தாக்கல் செய்ய பெப்ரவரி முதல் வாரம் வரை மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் அவகாசம் அளித்தது. தேசிய சின்னமாக அறிவிக்கக்கோரும் சுப்பிரமணியன் சுவாமியின் வழக்கு பெப்ரவரி இரண்டாவது வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சேது சமுத்திரத் திட்டத்தால் இராமர் பாலத்தின் கட்டமைப்பு பாதிக்கப்படும் என்பது சுப்பிரமணியன் சுவாமியின் குற்றச்சாட்டாகவுள்ளது. இதனிடையே, தமிழக சட்டப்பேரவையில், இராமேஸ்வரம் கடற்கரையில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீர்மானம் கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் கொரோனா பரவல் தீவிரம்;
## கடும் மருந்துத் தட்டுப்பாடு — மக்கள் அவதி

### அதிகரிக்கும் உயிரிழப்புகள்; சடலங்களை அடக்கம் செய்ய மயானங்களில் நீண்ட நேரம் காத்திருக்கும் அவலம்



சீனாவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள நிலையில், அங்கு கொரோனாவுக்கான மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருந்து உற்பத்தியை அதிகரிக்க, அங்குள்ள மருந்து நிறுவனங்கள் 24 மணிநேரமும் இயங்கத் தொடங்கியுள்ளன.

மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து, சீனாவில் விதிக்கப்பட்டிருந்த கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகள் உடனடியாக தளர்த்தப்பட்டதால், தொற்றுப் பரவல் வேகமெடுத்துள்ளது.

கொரோனா நோயாளிகளால் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதுடன், சிறிய நகரங்களில் கொரோனா மருந்துக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மேலும், கொரோனா மரணங்கள் அதிகரித்ததால், சடலங்களை அடக்கம் செய்ய மயானங்களில் காத்திருக்கும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7